வெற்றிமணி வெளியீடு 34

# சிவத் தமிழ்

*Free Circulation*

2020



## கடவுள் பக்தன் உறவு தேவைக்கு மட்டுமா



பிரதம ஆசிரியர்

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

அகமும் புறமும் ஆலயம் அமைப்போம்




தொகுப்பு: “ஆன்மீகத் தென்றல்”
தம்பி.புவனேந்திரன்

**வூப்பெற்றால் நவதுர்க்கா அம்பாள் ஆலயம்.**
கொடி 08.05.2020 தேர் 16.05.2020.
Hünefeld Str 63b
42282 Wuppertal. 0202 479 60 17

**ஹம் வெங்கடேஸ்வரப்பெருமாள் கோவில்**
அலங்கார உற்சவம் 14.05.2020.
தேர் 24.05.2020
Nassauer Str 20. 02381 42 66 420

**யுச்சன் நவசக்தி விநாயகர் ஆலயம்**
கொடி 30.05.2020 தேர் 07.06.2020
Hoch Str 10 b
41363 Jüchen. 02164 70 20 944

**சுட்காட் சித்திவிநாயகர் கோவில்**
கொடி 06.06.2020 தேர்14.06.2020.
Lehmfeld Str 18
70374 Suttgart.
0711 67 393 522

**கற்றிங்கன் வரசித்திவிநாயகர் ஆலயம்**
கொடி 13.06.2020 தேர்21.06.2020.
Gottwald Str 23
45525 Hattingen.
02324 270 61

**ஹம் காமாட்சிஅம்பாள் ஆலயம்**
கொடி 15.06.2020 தேர் 28.06.2020.
Siegenbeck Str 4-5
59071 Hamm.
02388 302 223

**எசன் கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
கொடி 04.07.2020 தேர் 12.07.2020.
Kloster Str 49 a
45149 Essen. 0201 806 74 33

**டோட்மூண்ட்**
**சாந்தநாயகி சமேத சந்திரமௌளீஸ்வரர் ஆலயம்**
கொடி 27.06.2020. தேர் 05.07.2020.
Kiefer Str 24
44225 Dortmund.
0231 72 51 51 65

**கிறிவீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி 27.06.2020 தேர் 05.07.2020.
Girmesgath 95
47803 Krefeld.
02151 565 00 45

**பிறாங்போட் நாகபூசணிஅம்பாள் அலயம்**
கொடி 07.07.2020 தேர்20.07.2020.
Adelbert Str 61- 63
60486 Frankfurt/m
069 979 45 618

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்அழகர் ஆலயம்**
கொடி 11.07.2020. தேர்
19.07.2020. Roon Str 2a
59065 Hamm.
02381 291 03

**குறிஞ்சிக்குமரன் ஆலயம் கோமஸ்பாக்**
கொடி 04.07.2020. தேர்12.07.2020.
Industrie Str 7
51643 Gummersbach.
02261 501 5964

**சித்திவிநாயகர் ஆலயம் சுட்காட்**
கொடி.17.07.2020 தேர். 26.07.2020
Waibinger Str 30
70372 Suttgart.
0711 11 32 81.

**சுவெற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்**
கொடி 18.07.2020. தேர்26.07.2020.
Robert Koch Str 5 a
58239 Schwerte.
02304 16721

**கிஸ்கெம்ரெக் கனகதுர்க்காஅம்பாள் ஆலயம்**
அலங்காரத் திருவிழா. 18.07.2020.
தேர் 26.07.2020.
Alleen Str 18-20
73230 Kirchheim U. Teck.
07021 807 43 99

**ஹம் சித்திவிநாயகர் ஆலயம்**
கொடி. 25.07.2020 .தேர் 02.08.2020.
Ferdinanand Poggel Str 25
59065 Hamm
02381 162 686.

**கனோவர் முத்துமாரி அம்பாள் ஆலயம்.**
கொடி.17.07.2020 தேர் 25.07.2020.
Carl- Buderus Str 3 a
30455 Hannover.
0511 471 149.

**பேர்லின் மயூரபதி முருகன் ஆலயம்**
கொடி. 25.07.2020. தேர் 17.08.2020.
Blaschko Alle 48
12355 Berlin. 030 694 6900

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 16 2020 இதழ் 34

16 வது ஆண்டில் சிவத்தமிழ்...





ஆரம்பம் 2004

பிரதம ஆசிரியர்

கலைஞானமணி

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A

0049 163 199 2333

e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்

ஆன்மீகத்தென்றல்

த.புவனேந்திரன்

கௌரவ ஆசிரியர்

கலாநிதி கவிஞர் வீ.கந்தவனம்

"இலக்கியச் செம்மல்"

இந்து மகேஷ்

யேர்மனி

Brinker Höhe 13

58507 Lüdenscheid - Germany

0163 199 2 333

Published by

Vettimaniy Ltd U.K


## சமர்ப்பணம்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு இவ்விதழ் சமர்ப்பணம்



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 95ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா 07.01.2020 தெல்லிப்பளை கனகதுர்க்கா தேவஸ்தான மண்டபத்தில் சிறப்பாக நடைபெற உள்ளது.

## இனிய சங்கமம்



# தன்னைத் தானே செதுக்குவதற்குரிய ஒரு தவம்

சின்ன வயதிலே நாங்கள் ஆலயங்களுக்கு செல்லும் போது அங்கே ஒரு கரும்பலகையில் ஆலயத்தில் செல்லத்தகாதவை என்ற தலைப்பிட்டு அதன் கீழ் 1.2,3,4 என ஆலயத்தில் வீண் வார்த்தைகள் பேசுதல் ஆகாது. ஆலயத்தில் குங்குமத்தை சந்தனத்தை தூண்களில் பூசுதல் ஆகாது. ஆலயத்தில் காலைக் கழுவி பிரவேசித்தல் வேண்டும் என அங்கு பல ஆகாது, ஆகாது, என எழுதியிருப்பதைக் கண்டிருப்போம். இவையாவும் அக்காலத்துக்குரிய குறைபாடுகளை அடியவர்களுக்கு எடுத்துச் சொல்லி திருத்துவதற்கான ஒரு முயற்சியாகவே அமைந்திருந்தது. அப்படிப் பார்க்கின்ற போது இக்காலத்தில் அதுவும் புலம்பெயர் தேசத்தில் உள்ள ஆலயங்களில் திருவிழாக்களில், செய்யத்தகாதவை என எம்மனதை உறுத்தும் சிலவற்றைப் பார்ப்போம்.

நீண்ட காலமாக ஒருவர் ஆண்டவனை வணங்கி ஏதோ ஒரு வேண்டுதலை முன்வைத்து கசிந்து உருகுகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு முன்னால் திடீரென்று ஆண்டவன் தோன்றி ஒரு செக்கன் தான் நிற்பேன் வேண்டியதைக் கேள் என்று ஆண்டவன் சொன்னால், சிரசுக்கு மேல் கரம் கூப்பி நின்ற இரு கரங்களும் உடனடியாக இறங்கி அந்த ஒரு செக்கனுக்குள் Hand phone எடுத்து selfie எடுத்துக் கொள்ளும்.

ஆலயங்களிலுள்ள செல்பி கலாசாரமாக இது உள்ளது. அடுத்ததாக எடுத்த அப்படத்தை முகப்புத்தகத்தில் போட்டு தினமும் அதிகாலை எழுந்தவுடன் எத்தனை Like விழுந்திருக்கிறது என்பதை எண்ணி அதனால், ஏற்படுகின்ற வியத்தகு மந்திர சக்தி ஆண்டவனை மிஞ்சி தனக்கே லைக் விழுவதாக எண்ணிக் கொண்டு தன்னையே ஆண்டவனாகப் பிரகடனப் படுத்தியும் விடும்.

எனவே முதலில் எல்லா ஆலயங்களிலும் எழுதாத சட்டமாக ஆலயத்துக்குள் செல்பி எடுப்பது தாமாகவே நிறுத்திக் கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி ஒரு ஆலய நிருவாகத்திற்கென ஒதுக்கப்பட்ட ஒருவரைத்தவிர எல்லோரும் படம் எடுத்தல் தவிர்க்கப்பட வேண்டும். அப்படி எடுத்தால் என்ன குறைந்துவிடும் என்று கேட்பவர்களும் இருக்கலாம்.

ஒரு குடும்பப் படத்தை நாம் எடுக்கின்ற போது அதில் ஒருவர் கண்ணை மூடிக் கொண்டாலோ ஒருவர் மூக்கைச் சொறிந்து கொண்டாலோ நாங்கள் முகப்புத்தகத்தில் அதனைப் போட மாட்டோம். ஆனால், நீங்கள் பொது இடத்தில் எடுக்கின்ற படத்தில் நீங்கள் மட்டும் அழகாக இருந்தால் போதும், இதனால் மற்றவர்களுடைய மனம் வேதனைப்படும் என்று நினைப்ப தில்லை.

அடுத்து ஒரு தேர்த் திருவிழாவிலே வெளிப்புற நிகழ்விலே ஒரு படத்தை எடுக்கின்ற விடயத்தைப் பார்ப்போம், அதாவது கற்பூரச் சட்டி எரிக்கும் பெண்கள் சிரசின் மேல் கைகூப்பி வணங்கும் பெண்களினது சேலைகள் ஒழுங்காக நிற்பதற்குரிய வாய்ப்புக்கள் அரிது. அதனைப் படம் எடுக்கின்ற போது பல தாய்மார்கள் சிரசிக்கு மேல் இருந்த கைகளை அவசரமாக இறக்கித் தன் பெண்பிள்ளைகளின் சேலைகளை ஒதுக்கி விடுகின்ற மனம் நெகிழும் பல காட்சிகளைக் கண்டிருக்கின்றோம். எனவே அவ் இடங்களில் எடுக்கப்படும் படங்களை நான் மட்டும் அழகாக இருந்தால் போதும் என்னும் எண்ணங்களை தவிர்த்து எல்லோரும் எம் பிள்ளைகள் என்னும் எண்ணத்துடன் அவற்றைப் பகிர்தல் ஆரோக்கிய மானது.

இவை இக்காலகட்டத்தில் நாங்கள் ஆலயத்தில் கடைப்பிடிக்க லேண்டிய முக்கியமானவை என்று அறிந்து செயற்படுவோம். இது கட்டளை அல்ல. தன்னைத் தானே செதுக்குவதற்குரிய ஒரு தவமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இது கடவுள் கேட்கும் வரம் என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

மு.க.சு.சிவகுமாரன்

# இசை - இயற்கை - இறை
## ஓர் புரிதல்



கலாநிதி சுகன்யா அரவிந்தன்,

இசை உயிர்களை இசையவைப்பது. மானுடம் அதற்குரிய தனித்துவங்களோடு பயணிக்க கடிவாளம் போலத் தொழிற்படுவது இசை. உலகு சரியான வழியிலே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்றால் அதற்கு அச்சாணியாக விளங்குவது அழகியல். அதிலும் இசை.

இன்றாட வாழ்வியல் நிகழ்வுகளைச் சற்று நின்று நிதானித்து சிந்திப்போமேயானால் இயற்கையின் ஒவ்வொரு இசைவிலும், மானுடத்தின் ஒவ்வொரு தடத்திலும் இசையானது ஒன்றிப்போயிருக்கின்றது என்றால் வியப்பில்லை.

'காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா!
பூதங்களொத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசை தருங்கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசைதருமின்பம் உவமையில்லா இன்பமன்றோ?'
இன்னும்,

'கானப்பறவை கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்றுநீரோசை அருவியொலியினிலும்
நீலப்பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத்திடையே உதிக்கும் இசையினிலும்'

இன்பம் கண்டான் பாரதி. மகாகவி பாரதியின் இயற்கையை இசையாயுணர்ந்து பாடிய இந்த வரிகள் இயற்கையும் இசையும் தம்முள் அத்துவிதமாயமைந்திருக்கின்ற தத்துவத்தைத் தெளிவாக்குகின்றது.

அண்ட சராசரத்தை தன்னுடைய கடைக்கண் பார்வையால் இயக்குவது மகாதேவனுடைய கையிலுள்ள உடுக்கின் அதிர்வொலி ஆகும். உலகம் தன் பாதையிலே தடம் மாறாது, அட்சரம் பிசகாது இயங்கிக் கொண்டிருக்கின்றது என்றால் அதற்கு அந்தப் பரம்பொருளிலிருந்து வியாபிக்கின்ற ஒலியலைகளே காரணமாகின்றன. இது ஞானத்தின் மெய்ப்பொருள்.

இறைவனை இசைவடிவமாகக் காண்பது இந்துமதம். ஓசை ஒலியெலாம் அவனேயென்று உலகிற்கொருவனாய் நிற்கும் மகாதேவனை இசைக்கான இருப்பிடமாகக் கண்டது இந்து சமயம்.
கடவுளர்கள் ஒவ்வொருவரையும் இசைக்கருவிகளோடு கூடி வடிவமைத்தது இந்து சமயம்.



கலாநிதி சுகன்யா அரவிந்தன்,
விரிவுரையாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.

எவன் எந்தக்கடவுளை வழிபடினும் இசையும் இறையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாதது என்கின்ற தத்துவத்தை அவன் புரிதல் அவசியம் என்பதை இந்து சமயம் உணர்த்தத் தவறவில்லை.

இசையின் காத்திரம் உணர்ந்த இந்து சமயம் இறைவனையும் இசையையும் மிக அருகிலே நிறுத்திப்பார்த்தது. இறைவனை அடைவதற்குரிய மிக இலகுவான மார்க்கமாக உணர்த்தியது. நாயன்மார்கள் இறைபுகழ்பாடி முத்தி பெற்றனர். நாயன்மார்களது வாழ்வியல், எமக்கு இசைக்கும் இறைக்குமுள்ள மாறா உறவினை இலகுவாகப்புலப்படுத்தி நிற்க்காணலாம்.

இந்து மதத்தின் வரலாற்றோடு கூடி வளர்ந்தது நம் தமிழிசை என்று கூறின் மிகையில்லை. சிற்றிலக்கியங்களாக, தேவாரப்பதி கங்களாக, தமிழ்ப்பா வடிவங்களாக, கீர்த்தனை களாகவெனப் பல வடிவங்களிலே இறையுடன் கூடி வளர்ந்தது இசை.

'ஆனாலும் உந்தன் அதிசயங்கள் யாவினுமே
கானாமுதம் படைத்த காட்சி மிகவிந்தையடா!'

மகாகவி பாரதி

# அலை வாசிக்கும் அதிசய ஓர்கன் இசை! "The Sea Organ" Nikola Basic

சிவஜெனனி அரவிந்தன்







2005 ஆம் ஆண்டில் கிரோசியா (Croatia) நாட்டில் அங்குள்ள ஆர்கிற்ரேக் (கட்டிடக் கலைஞர்) ஒருவர் 230 அடி நீள அளவில் ஓர்கன் கருவியை வியக்கும் வண்ணம் செய்துள்ளார். இதில் என்ன அதிசயம் என்றால் இந்தக் கருவியை இயற்கையால் தான் வாசித்து மகிழ முடியும். அந்த இயற்கைக் கலைஞன் உலகின் மூன்றில் இரண்டு பகுதியை ஆக்கிரமித்துள்ள கடல் என்னம் பெரும் கலைஞன் அவனது அலைகள் பார்பதற்கு அழகாகவும் கேட்பதற்கு இதமானதுமான அலைஓசைகள்.புல்லங்குளலில் காற்றுப்புகந்தால் புதுப்புது இசையாககும் அதுபோல் இங்கும் கடற்கரையில் அமைத்த துவாரங்களுக்குள் அலைகள் அழைத்துவரும் காற்கு புகந்தால் புதுப்புது இசை ஆகும். **தொடர்ச்சி 8ம் பக்கம்.**




கரிணி

அக்கினி குஞ்சு என்றாலே எல்லோருக்கும் மனக்கண்ணில் நிற்பது பாரதியார் தான். அவர் எழுதிய பாடல் அவ்வளவு பெறுமதி வாய்ந்தது.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

இந்த கவிதையின் பொருள் பலவற்றிற்கு அச்சொட்டாகப் பொருந்தி விடும். இருப்பினும் என்ன மனநிலையில் எழுதப்பட்டது என்பது பாரதிக்கே வெளிச்சம்.
பொதுவாக மனமாகிய பொந்தில் சிறு தீய எண்ணமாகிய தீப்பொறியை போட்டுவிட அந்த தீய எண்ணமே மெல்லப் பெருகி அங்குள்ள எல்லா நல்ல விடயங்களையும் அழித்து ஏப்பம் விட்டுவிடும் என்ற பொருளே சொல்லப்பட்டு வருகிறது. இருப்பினும் நுண்ணுணர்வோடு உற்று நோக்குகையில் மூலாதாரத்திலே கனன்று கொண்டிருக்கின்ற தீப்பொறியை காட்டின் இடைப் பொந்து என்று சொல்லப்படுகின்றன நெற்றிப் பொட்டிற்கு கொண்டு வரும் போது மாயையாகிய காடு எரிந்து அற்றுப் போனது எனலாம்.

விநாயகர் அகவலில் கூட ஔவையார் இவ்வாறு பாடியுள்ளார். " மூலாதாரத்து மூண்டெழு கனலை காலால் எழுப்பும் கருத்தறிவித்தே..." என்று கூறியுள்ளார்.

மூலாதாரம் என்பது ஒவ்வொருவருக்குள்ளேயும் முள்ளந்தண்டின் அடிப்பகுதியில் ஆதார சக்தியாக விளங்குகின்ற தீப்பொறி. "குண்டலினி" என அழைக்கப்படும் ஒரு நுட்பமான பிராண சக்தி. கால் என்றால் மூச்சுக் காற்று எனப் பொருள்படும். காலால் எழுப்புவது என்பது சுவாசத்தை சீராக்கி உள் நிறுத்தி மூலாதார சக்தியை தலைப்பகுதிக்கு கொண்டு செல்வது. அதே பாடலில் ஔவை மேலும் " இடை பிங்கலையின் எழுத்தறிவித்து கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி, மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின் நான்றெழு பாம்பின் நாவினில் உணர்த்தி..." என்று பாடியுள்ளார். இடைகலை என்பது மூக்கின் இடதுபக்க சுவாசமும், பிங்கலை என்பது வலதுபக்க சுவாசமும் ஆகும். கடையிற் சுழுமுனை என்பது மூளையில் இருந்து முள்ளந்தண்டு வழியாக அதன் அடிவரை நீண்டுள்ள நாடி ஆகும். அந்த நாடிக்கு "சுழுமுனை நாடி" என்று பெயர். அதற்கு அடியில் சுவாசம் பெறப்பட்டு அந்த நாடி வழியாகத்தான் சிரசுக்கு குண்டலினி சக்தி செல்கிறது. அது பாம்பின் வடிவத்தில் செல்வதனால் அதை நான்றெழு பாம்பு எனப் பாடியுள்ளார்.
சுழுமுனை நாடியில் அடியில் இருந்து நெற்றி வரை ஆறு சக்தி மையங்கள் உள்ளன. அவை "சக்கரங்கள்" என்று அழைக்கப்படும். அவை முறையே முள்ளந்தண்டின் அடியில் மூலா தாரமும், அதற்கு இரு விரட்கடை மேலே சுவாதிஷ்டானமும், தொப்புளிற்கு நேரே மணிபூரகமும், நெஞ்சில் நடுவில் அநா கதமும், கழுத்தில் விசுத்தியும், நெற்றி புருவங்களின் நடுவே ஆக்ஞையும் என ஆறு பெயர்கள் கொண்ட ஆதாரங்கள் இயங்கி பின் ஈழாவதாக உச்சந்தலையில் இருக்கும் சகஸ்ரதார தளம் என்று சொல்லப்படுகின்ற பெரு வெளியில் குவிகின்றது ஆன்ம சக்தி.

இவ்வாறு முள்ளந்தண்டின் அடியிலிருந்து தலைவரை இருக்கின்ற ஆறு ஆதார சக்கரங்களை சக்தி நிலை மேம்படுத்தியே ஏழாவது சக்கரமான உச்சந்தலைக்கு இந்த குண்டலினி செல்ல முடியும். அந்த நிலையை அடையும் போது பரவெளி சுத்த அறிவும், அசுத்த மாயையின் விடுதலையும் கிடைக்கப்பெறும். சீவன் சிவனாகிவிடும். இது பரத்தோடு கலத்தல். அதாவது எங்கிருந்து வந்தோமோ அந்த மூலத்தோடு ஒன்றிணைதல் எனப்படும். இதையே திருமூலரின் திருமந்திரப் பாடல்களில்

"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்..."
"தன்னை அறிய தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்..."
"உள்ளம் பெரும் கோயில் ஊன் உடம்பு ஆலயம்....
தெள்ளத் தெளிந்தோர்க்குச் சீவன் சிவலிங்கம்..."

என இவ்வாறு திருமந்திரம் வாயிலாக இறைவனை அகத்துள் கண்டு இறைவனாகவே ஆகிவிடுதலை ஆயிரக்கணக்கான பாடல்களில் விளக்கமாக கூறியுள்ளார். இலகுவில் இறைநிலை அடையும் வழியை திருமந்திரம் கூறுவதனால் அவை முதலாம் தந்திரம், இரண்டாம் தந்திரம் என தந்திரங்களாக பிரித்துக் கூறப்பட்டுள்ளன.
தமிழர் பாரம்பரியத்தில் சைவத்தையும், தமிழையும் ஒன்றாகவே முன்னோர்கள் கட்டிக் காத்து வந்தனர். இரண்டையும் வேறு படுத்தவில்லை. பழந்தமிழ் நூல்கள் பலவற்றில் யோகமும், ஞானமும் அடையும் வழிகள் காட்டப்பட்டிருக்கின்றன. மனிதர்களாக பிறந்ததன் பலனை அந்தந்த ஆன்மாவின் கன்ம வினைகளுக்கு ஏற்ப விரைவாகவோ, தாமதமாகவோ உணர்ந்து கொள்வார்கள். நல்லாசிகள் உள்ளவர்களுக்கு இலகுவில் சித்தி யடையக்கூடிய யோக தந்திரங்கள் சித்தியளிக்கும்.

தமிழர் பாரம்பரியமே இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே ஆண்டான் அடிமை போக்கை உருவாக்கவில்லை. ஆன்மாவானது பரமான்மாவின் பகுதியாகவே பார்க்கப்படுகிறது. ஜீவான்மாவை பரமான்மாவாக உயர்த்தும் தத்துவமும், வழியும் தமிழில் இருந்தே சமஸ்கிருதத்திற்கு சென்றது. அது தவிர இன்னும் விஞ்ஞானம் தேடிக் கொண்டிருக்கின்ற எத்தனையோ விடயங்களை மிகச் சாதாரணமாகவே விரிவாக எழுத்துவடிவில் எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளனர் தமிழின் பாரம்பரிய வழிகாட்டிகள்.

அக்கினிக் குஞ்சுகள் கனன்று கொண்டே இருக்கின்றன. அவை மேலெழ காற்றைப் பிடிக்கும் கலை தேவை. யோகம் செய்ய விரும்புக! அதன் வழியே அனைத்தையும் கண்டு கொள்ள முடியும். இறவாத இன்ப நிலையை ஆன்மாவால் அனுபவிக்க முடியும். சிறு கட்டுரையில் விளக்கிவிட முடியாத அருமை பெரும் விடயம் இது. இதனை தேடத் தொடங்கும் போதே அது தேடுபவரை பன்மடங்காக தேடத் தொடங்கும் என்பதே விதி. இனிய ஆரம்பம்...

**"ஏற்றி இறக்கி இரு காலும்பூரிக்கும்**
**காற்றை பிடிக்கும் கணக்கு அறிவாரில்லை**
**காற்றை பிடிக்கும் கணக்கு அறிவாளர்க்கு**
**கூற்றை உதைக்கும் குறி அதுவாமே!**

திருமந்திரம்

# சிவன் விருப்பத்தால் உருவான திருமந்திரம்

**(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)**



ஆகமங்கள் சைவ சமயத்தை உள்ளடக்கிய இந்து சமயத்தின் கோட்பாடு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வகையான வழிபாட்டு முறை, கோயில் அமைப்பு உட்பட சகல விடையங்களையும் உள்ளடக்கியது. ஆகமங்கள், வேதங்கள் குரு சீஷ்ய பரம்பரையாக வாய் மொழியாகவே அறியப்பட்டு வந்தன. பிற்காலத்தில் இவை சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன. முதன்முதலில் தமிழில் பாடப்பெற்ற நவ ஆகமங்களின் சாரம் திருமூலநாயனாரால் பாடப்பெற்ற திருமந்திரம் ஆகும். திருமந்திரத்திற்கு தமிழ் வேதம் என்ற பெயரும் உண்டு.

திருக்கயிலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல்பூண்ட திருநந்திதேவரது திருவருள்பெற்ற மாணவர் சுந்தரநாதன் (சுந்தரர்) என்னும் அட்டமாசித்திகளும் பெற்ற தவயோகிதான் பூவுலகிற்கு வந்து திருமந்திரத்தைப் பாடிய திருமூலநாயனார். இதற்கு ஆதாரம் 1. சேக்கிழார் பெருமானால் பாடப்பட்ட திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) என்னும் நூலில் வரும் "கயிலாயத்தொருசித்தர் பொதியிற் சேர்வார் காவிரிசூழ் சாத்தனூர் கருதுமூலன்" என்னும் வரிகள், 2. திருத்தொண்டர் புராணத்தில் திருமூல நாயனாரின் வரலாற்றைக் கூறும் பின்வரும் பாடல் (எண் 23)

"தண்ணிலவார் சடையார் தாம்
தந்த ஆகமப் பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர்
வாக்கினால் தமிழ் வகுப்பக்
கண்ணிய அத்திரு அருளால்
அவ்வுடலைக் கரப்பிக்க
எண் நிறைந்த உணர்வு உடையார்
ஈசர் அருள் என உணர்ந்தார்"

3. நம்பியாண்டார் நம்பிகளால் பாடப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதியில் வரும் பின் வரும் பாடல் (எண் 37)

"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டு என் உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூலன் ஆகின்ற அங்கணனே"

4. திருமந்திரம் முந்நூறு என்னும் நூலில் சிறப்பாயிரத்தில் "மந்திரம் கொண்டு...... எனத் தொடங்கும் பாடலில் "சுந்தரநாதன் சொல்லிய மந்திரம்" என்ற வரிகள் 5. திருமூலநாயனாரால் பாடப்பட்ட திருமந்திரத்தில் கீழ் வரும் பாடலில் (எண் 81) தமிழ் வேதம் செய்வதற்காகவே, தான் இறைவனால் பிறப்பிக்கப்பட்டேன் எனக் கூறியுள்ளார்.

"பின்னை நின்றுஎன்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே."

முற்பிறப்பில் முறையாகத் தவம் செய்யாதவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து பிறவி என்னும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் நான் இறைவனை நன்றாகத் தமிழ் வேதம் செய்வதற்காக இறைவனால் பிறப்பிக்கப்பட்டுள்ளேன்.

6. திருமந்திரத்தைத் தமிழ் ஆகமம் எனக் கூறும் திருமந்தரப் பாடல் எண் 74

"செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பிலி எழுகோடி யுகம் இருந்தேனே"

சிவாகமம் (இறைவன் அருளிய மறைநூல்) எனச் சொல்லப்படும் இத்தமிழ் மறையை நந்தியெம் பெருமான் திருவடித் துணையால் அருளப் பெற்ற நான், இறைவனின் ஆனந்தத் திருநடனத்தை என்னுள்ளே நானே கண்டு, ஓராயிரம் கோடி ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தேன்.

ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்னும் தத்துவத்தைக் கூறும் பாடல் எண் 2104

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே."

மனித குலம் முழுமையும் ஒன்றுதான், இறைவனும் ஒருவன்தான். எப்பொழுதும் நல்லதையே நினையுங்கள், எவருக்கும் நல்லதையே செய்யுங்கள் இப்படி வாழ்பவர்கள் இறவாப் புகழுடன் வாழ்வார்கள். வெட்கப்படாமல் துணிந்து நீங்கள் செல்லத்தக்க வழி வேறு இல்லை. எனவே மனத்துள்ளே சிவனை நினைத்து அவனருளுணர்வோடு பொருந்தி, தடுமாற்றம் இன்றி அவன் திருவடி நினைந்து நற்கதி அடையுங்கள்.

இறைவன் ஒருவனே எனக் கூறும் பாடல் எண் 1.

"ஒன்றவன்தானே இரண்டவன் இன்அருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழ்உம்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந்து எட்டே".

ஒன்றாயிருப்பவன், அவனே சிவனும் சக்தியுமாக இரண்டாகவும் இருக்கின்றான். அவனே பிரமன், திருமால், உருத்திரன் என மூன்றாகவும் உள்ளான். அவன் நான்மறை (நான்கு வேதங்கள்) வடிவானவன். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுக்கும் அவனே தலைவன். சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் என்னும் ஆறு சமயப் பிரிவுகளாக இருப்பவன் அவனே. ஏழ் உலகங்களிலும் இருப்பவனும், அவற்றை இயக்குபவனும் அவனே. இப்படி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் தன்வயமாதல், தூய உடலினன் ஆதல், இயற்கை உணர்வுடைதல், முற்றும் உணர்தல், பற்றற்றிருத்தல், பேரருள் நோக்கு, முடிவில்லாமை, எல்லையில்லாமை ஆகிய எண்குணத்தவனாக இருக்கின்றான்.

இறைவன் இல்லாத இடமில்லை எனக் கூறும் பாடல் எண் 93

"இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆர்அழல் வீச
உருக்கிய உரோமம் ஒளிவிடும் தானே"

எண்ணிப் பார்த்தால் சிவபெருமான் எண்ண முடியாத பல கோடி மந்திரங்களில் அதன் உட்பொருளாய், அந்த மந்திரங்களோடு பொருந்தி இருப்பான். சூரியனும், சந்திரனும் ஒளி வீசித் திகழுவது போல, ஆன்மாக்கள் உடலில் மூலாதாரத்தில் "ஓம்" எனும் பிரணவ சொரூபமாக உருக்கிய பொன் போல ஒளிக் கதிர் வீசித் திகழ்வான்.



# தாலி

தாலி என்பது திருமணத்தின் போது மணவாளன் தன் உரிமைப் பெண்ணாக ஒரு பெண்ணை அடையாளப்படுத்த அணிகின்ற ஒரு சாதனமாகிய மாங்கல்யம் ஆகும். இது வட இந்தியாவில் மங்கல்சூத்திரா என்று அழைக்கப்படுகிறது. அதாவது தாலி என்பது ஒரு அடையாளச் சின்னமே. திருமணத்தின்போது ஒரு ஆண் பெண்ணுக்குக் கழுத்தில் அணிவிக்கும் ஒரு அணிகலனாகும். தலைநிமிர்ந்து வரும் ஒரு ஆடவன் தாலி அணிந்த பெண்ணைக் காணும்போது இவள் திருமணமான ஒரு பெண் என்று அடையாளங் கண்டு கொள்வான்.

இந்த வகையிலேயே மெட்டி என்னும் ஒரு அணிகலன் ஆண்கள் கால்களில் அணியப்பட்டது. தலைகுனிந்து வரும் பெண்கள், மெட்டி அணிந்த ஆண்களைக் கண்டு விலகிச் செல்வார்கள். ஆனால், அதில் இன்னுமொரு உண்மைக் காரணமும் உண்டு. மெட்டியிலுள்ள உலோகம் விஷத்தை நீக்கக்கூடியது தன்மையுள்ளது. காடுகளில் திரிகின்றபோது விஷ ஐந்துக்களின் தாக்கத்தில் இருந்து ஆண்களைப் பாதுகாக்க இம்மெட்டி அணியப்பட்டது. ஆனால், திருமணமான ஆண்களே விஷ ஐந்துகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்களா? என்பது கேள்வி. இதன் மறுமுனியில் சிந்தித்தால், அக்காலத்தில் சிறுபிராயத்திலேயே ஆண்பெண் இருபாலார்க்கும் திருமணம் செய்து கொடுத்து விடுவார்கள் என்பதும் உண்மையே. சிறுவயதிலேயே குடும்பத்திற்காக உழைப்புத் தேடவேண்டிய பொறுப்பு ஆண்மகனுக்கு ஏற்பட்டது. அதனால், இம்மெட்டி அவர்களுக்கு விஷ ஐந்துக்களிடமிருந்து பாதுகாப்பைக் கொடுத்தது.

ஐம்பொன் நகைகள் அணியப்படுவதும். செம்பு பயன்படுத்தவதும் நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும். இதைவிட இம்மெட்டியானது தற்பொழுது திருமணநாளன்று பெண்களுக்கே அணியப்படுகின்றது. மெட்டி அணியப்படும் விரலுக்கும் கர்ப்பப்பைக்கும் இடையே தொடர்பு இருப்பதனால், இம்மெட்டியானது கர்ப்பப்பைக்கு வலிமையைக் கொடுக்கின்றது. இதனால் பெண்களுக்கு மெட்டி அணிதல் பொருத்தமாகவே இருக்கின்றது. இம்மெட்டி விடயம் இவ்வாறிருக்க தாலிக்குத் திரும்புவோம்.

ஆரம்ப காலத்தில் தான் விரும்பும் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்மகன் அன்பளிப்பாக மலரைக் கொடுத்தே பெண்ணை ஆண்மகன் ஆண்டு கொண்டான். இம்முறை குரங்குகளிடமும் இருக்கிறதாம். பிற்காலத்தில் மலர் பூமாலையாக அணியப்பட்டது. இது ஒரு அன்பளிப்புப் பொருளாகவே கருதப்பட்டது. 11ஆம் நூற்றாண்டில் புலவர் கச்சியப்ப சிவாச்சாரியார் முதன் முதலாகத் தாலியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதுகூட தெய்வையானை திருமணத்தில் அணியப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. தெய்வையானை திராவிடர் அல்லாதவராகக் காணப்பட்டார். அதன் பின்பு 12 ஆம் நூற்றாண்டில் கம்பர், சேக்கிழார் தாலியின் மகிமை பற்றிக் கூறியுள்ளார்கள். அதன் பின்புதான் தமிழர் கலாசாரத்தில் தாலி அணியப்பட்டது.

முற்காலத்தில் தாலி மஞ்சள் கயிற்றில் அணிவிக்கப்பட்டது.

மஞ்சளானது தோலுக்கு மென்மையையும், அழகையும் கொடுக்கும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்மையுள்ளது. இதனால், மஞ்சள் கயிற்றில் தாலி அணிவிக்கப்பட்டது. முற்காலத்தில் வேட்டையாடி புலியைக் கொன்ற ஆடவன், அதன் பல்லை எடுத்துக் கழுத்தில் மாலையாக அணிவது வழக்கமாக இருந்தது. பின் திருமணத்தில் அதனைத் தன் மனைவிக்கு அணிவித்தான் என்றும் அறியப்படுகின்றது. அதனாலேயே மஞ்சளில் தாலி கட்டும்போது மஞ்சள் புலிப்பல் வடிவிலே எடுக்கப்படுகின்றது. தற்பொழுது அது பொற்தாலி என்னும் வடிவத்திற்குத் தாவிச் செல்வப்பெருமையை வெளிக்காட்டும் ஒரு சாதனமாக அணியப்படுகின்றது.

இப்போது 25,30 பவுண்களிலும் பெண்ணின் எடைக்கு ஏற்பவும் அணியப்படுகின்றது.தாலியைத் தாங்க முடியாத கழுத்துக்குனிய விழாக்களுக்கு மட்டும் அணியப்பட்டு மறுவேளை வீட்டு அலுமாரியில் அடைந்து கிடக்கின்றது. அதைவிட தாலியில் கணவன், மனைவி உருவம் படம் வடிக்கப்பட்டும் அணியப் படுகின்றது.

## கௌசி

திருமணநாளன்று சுபமுகூர்த்த நேரத்தில் கூறைச்சீலை உடுத்து மணமகனின் வலது பக்கத்திலே கிழக்கு நோக்கி மணமகள் அமர மணமகன் எழுந்து மணமகளின் வலதுபக்கம் வந்து வடக்குத் திசையை நோக்கி நின்று குருக்கள் மற்றும் பெரியோர் ஆசீர்வதித்துக் கொடுத்த மாங்கல்யத்தை எடுத்து, மாங்கல்யம் தந்துநாநே நமஜீவன ஹேதுநா கண்டே பத்தாமி ஸுபகே சஞ்ஜிவசரதசம்" என்ற மந்திரத்தைக் குருக்கள் உச்சரிக்க, கெட்டிமேளம் முழங்க (அபசகுன வார்த்தைகள் எதுவும் காதில் கேட்காவண்ணம்) பெரியோர்கள் அர்ச்சதை, மலர்கள் தூவ மணமகன் மேற்குத் திசை திரும்பி நின்று மணமகள் கழுத்தில் மாங்கல்யம் அணிவான். தாலியில் கட்டப்பட்டிருக்கும் மஞ்சள் கயிற்றில் 3 முடிச்சுகள் இடுவார்கள். அதன் அர்த்தம் முதல் முடிச்சு உரிமைக்காக இடப்படுகின்றது. அதாவது கணவன் மனைவிக்கு வாழ்வில் சம உரிமையைத் தருவேன் என்று அடையாளப்படுத்த இம்முடிச்சு இடப்படுகின்றது. இரண்டாம் முடிச்சு உறவுக்காக இடப்படுகிறது. கணவன் மனைவி இருவர் குடும்பங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று இடப்படுகின்றது. மூன்றாம் முடிச்சு இந்தக் குடும்பத்தில் இப்பெண் முக்கியமானவர் என்று சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக இடப்படுகின்றது. புராணத்தில் இம் மூன்று முடிச்சுக்களுடைய விளக்கமாக முதல் முடிச்சு இறைவன், தேவர்கள், விண்ணவர்கள் சாட்சியாகவும், இரண்டாம் முடிச்சு முன்னோர்கள் சாட்சியாகவும், மூன்றாம் முடிச்சு பெற்றோர்கள், திருமணத்திற்கு வந்தவர்கள் சாட்சியாகவும் கட்டப்படுகின்றது.

தாலி வகைகள் பற்றி பின்வருமாறும் சொல்கின்றார்கள்.
பறவை அன்னம் மாங்கல்யம், ஊசிபொட்டு மாங்கல்யம், காரமணித்தாலி, சைவப்பிள்ளைதாலி, செட்டியார் தாலி போன்ற தாலிகளும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் தாலி மீனாட்சி, சுந்தரேஸ்வரர் வடிவம் வடிக்கப்பட்டுள்ளது.

**பொட்டுத்தாலி** குங்குமத்தைக் குறிக்கின்றது. பவளம், கறுப்பு மணி சேர்த்து அணியப்படும்.

**சிவலிங்கம் தாலி** சிவபெருமானை வழிபடும் பிராமணர்கள் அணிவார்கள்.

**தென்கலைநாமம் தாலி** பெருமாளை வழிபடும் பிராமணர்கள் அணிவார்கள்

**அன்னலட்சுமி தாலி** - இலட்சுமியுடன் அன்னம், மயில், அன்னம், கிளி வடிக்கப்பட்டிருக்கும்

**வடகலைநாமம் தாலி** சங்கு, சக்கரம் பெருமாளுடன் வடிக்கப்பட்டிருக்கும்.


**துளசி தாலி** துளசி, சூரியன், சந்திரன் வடிக்கப்பட்டிருக்கும்.

**நக்ரதா தாலி** தாலி, 34 வகையான தக்க பாகங்கள் சேர்த்து பெரிதாக அமைக்கப்பட்டிருக்கும்

**சொக்கர் மீனாட்சி தாலி** தாலி, இரண்டு பவளம், இரண்டு குளாய், இரண்டு இலட்சுமி காசு, ஆகியவை சேர்த்து அணிவார்கள்

**கௌண்டர் மாங்கல்யம் தாலி** தாலி, இரண்டு பவளம், இரண்டு குளாய், இரண்டு இலட்சுமி காசு, 2 மணி ஆகியவை சேர்த்து அணிவார்கள்.

**கரூர் மாங்கல்யம்** - 2 குழாய், 2வாழைப்பூ, மணி சேர்த்து அணிவார்கள்



அவரவர் கழுத்து அவரவர் அணிகின்றார்கள் என்றாலும் பெண்கள் தம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்க முடியுமா? கணவன் எப்படி முக்கியமோ, அதுபோல் கணவன் அணிவித்த பூவையும், பொட்டையும், தாலியையும் பெண் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டாள். பெண் இறக்கின்ற போது அவள் கழுத்திலிருந்து தாலி இறங்கும் அல்லது கணவன் இறக்கும் போது அவள் கழுத்திலிருந்து தாலி இறங்கும். இதுவே நாம் அறிந்த வரை காலம் காலமாக தொடருகின்ற தமிழர்களுடைய கலாசாரமாகும்.
தாலி பரம்பரை பரம்பரையாகப் போற்றிப் பாதுகாக்கப் படுவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

ஒரு தாய் தன்னுடைய தாலியைத் தன் கணவன் இறந்த பின் மகளின் திருமணத்திற்கு நகையாக மாற்றுகின்றாள். தாலிக் கொடியைத் தன் மகள் அணிவதற்குக் கொடுக்கின்றாள். அது மட்டுமன்றி இந்தத் தாலி பல வறிய குடும்பங்களுக்கு வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது. நோய்வாய்ப்படும் பிள்ளையின் மருத்துவச் செலவுக்கு அடகு கடையில் வைக்கப்படும். அவசர தேவைக்கு விற்கப்படும். தன்னுடைய பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக எத்தனையோ தாய்மார்கள் தம்முடைய தாலியை விற்று பிள்ளைகளை நாட்டைவிட்டு அனுப்பி யுள்ளார்கள்.
புலம்பெயர்ந்த பலருடைய வாழ்க்கைக்கு இந்தத் தாலியே பயனைத் தந்திருக்கின்றது.
தாலி ஒரு பெண்ணுடைய கழுத்திலே கட்டுப்படும் போதே அது எதிர்கால வைப்புப் பணமாக அமைகின்றது. இதுவே ஒரு ஆணின் கழுத்தில் கட்டப்பட்டிருந்தால், அது எதிர்காலச் சொத்தாக கருதப்பட்டிருக்க மாட்டாது என்பதும் உண்மையே.

எனவே கலாசார விழுமியங்கள் காரணம் இல்லாமல் தோன்ற வில்லை. அதைக் காலச் சூழலுக்கேற்ப கட்டிக் காக்க வேண்டியதும் அவசியமே.



**கௌசி**

கணவன் வாழும்வரை மனைவி மார்பில் எப்பொழுதும் இத்தாலி தவழ வேண்டும். அவனை நெஞ்சோடு தான் தாங்கி வாழும் தன்மையை காலம் முழுவதும் அப்பெண் எடுத்துக்காட்ட வேண்டும். இவ்வாறு இத்தாலி அணியப்பட்ட நிலைமை மாறி இப்போது அழகுசாதனமாக்கப்பட்டு விட்டது.

தமிழர் கலாசார சின்னத்துள் ஒன்றாகக் கருதப்படும். இத்தாலிக்கு ஒரு மகத்துவமும் உண்டு. மார்பிலே உயிரோட்டம் உள்ள இதயத்தில் இத்தாலி தட்டுப்பட்டுக் கொண்டு இருக்க, அது சீன மருத்துவ முறையான அக்யூபக்சர் முறைபோல் தொழிற்படுகின்றதாம். எனவே, தாலி என்பது பெண்ணுக்கு வேலி என்பது மாத்திரம் அன்றி பெண்ணுக்கு வலிமை என்றும் சொல்ல வேண்டும்.
பெண்களுக்கே உரிய உரிமைப் பொருளான தாலியின் மகிமைகள் இவ்வாறு இருக்க பெண்ணுக்கு சம உரிமை கொடுக்கின்றோம் என்று ஆண்களும் தற்போது தாலி அணியத் தொடங்கிவிட்டார்கள்.



## அலை வாசிக்கும் அதிசய ஓர்கன் இசை!

4 ம் பக்கத் தொடர்ச்சி

அதாவது இந்த ஓர்கன் படிக்கட்டின் வடிவில் அடிறியாட்டிக் கடற்கரை (யுனசயைவளை ளுநய) அருகில் அமைக்கப் பட்டிருக்கின்றது. கடல் அலைகளே இந்தக் கருவியை மீட்டுகின்றன. கடலில் இருந்து அலைகளுடன் சேர்ந்து வரும் காற்று அந்தப் படிக்கட்டில் அமைத்திருக்கும் குழாய்களுடாக சென்று வெள்வேறு அலைவரிசையில் எவராலும் வாசிக்க முடியாத புது இசையை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.





இயற்கை வாசித்தவன் சிறந்த கலைஞன், இன்று உலகில் உள் எந்தக்கண்டு பிடிப்பக்களும் இயற்கையின் சாயலின்றி எதுவும் இல்லை. கணனி என்றால் மூளை. விமானம் என்றால் பறவை, கப்பல் என்றால் மீன். ரோபோ என்றால் மனிதன், இசை என்றால் தென்றல், அலை, பாட்டு என்றால் குயில், நடனம் என்றால் மயில், ஒளி என்றால் சூரியன் இப்படி எல்லாமே இயற்கை! இயற்கையை சற்று இரசிகத்தெரிந்த ஒவ்வொரு வரும் கலைஞர்களே!
பின்பு இந்தக் கடற்கரையில் இரசிகர்கூட்டத்திற்கு கேட்கவா வேண்டும். அலகள் ஓய்வதில்லை! அப்படி என்றால் இந்தக் கடற்கரையில் ஓர்கனும் ஓயாது வாசித்துக் கொண்டே இருக்கும்.
ஆலை ஓசையை அணு அணுவாக இரசித்த ஒரு கட்டிடக்கலைஞனின் கரங்களுக்கள் இசை மீட்க ஒத்துக்கொண்டது அந்த மாபெரும் அலைகள். அந்த ஆனந்த அலைகளின் அலைப்பாட்டுத்தான் இக்கடற்கரையில் வாசிக்கப்படும் ஓர்கன் இசையாக அசத்துகின்றது. அதுவே அலை வாசிக்கும் அதிசய ஓர்கன் இசை!

"Morske Orgulje" and or "The Sea Organ" Nikola Basic. Located on the shores of Zadar, Croatia, is the world’s first pipe organ which plays music by way of sea waves and 35 musically tuned...

# இராவணனன் மேலது நீறு !



**தனசேகர் பிரபாகரன்**

தென்னக மற்றும் ஈழத்து சிவாலயங்களில் உற்சவங்கள் நடக்கும் போது பல வாகனங்களில் உமையோடு ஈசன் உலா வருவதுண்டு அப்போது கண்டிப்பாக ஓர் நாள் கயிலாய பர்வத வாகனம் ,ருக்கும், பெயர் மட்டும் தான் கயிலாய பர்வதம் ஆனால் உற்று நீங்கள் நோக்கினால் அது இராவண வாகனம். ஈசனுக்கு மட்டுமல்ல நல்லைக் கந்தனுக்கும் அந்த வாகனம் உண்டு. தன் நரம்புகளையே தந்திகளாக்கி இசைபாடி சிவபெருமானை துதித்தவனாதலால் வீணையில் தேர்ந்தவனென்றும் அந்த வீணையை தம்கொடியில் கொண்டதால் வீணைக்கொடியுடைய வேந்தனென்றும் விளிக்கப்பெறுகிறான். அப்படி பத்து தலை களுடன் கையில் வீணை ஏந்தும் ராவண வாகனம் தான் கயிலாய பர்வத வாகனம்.



இதிகாசமான இராமாயணத்தின் ராமனின் நேர் எதிராக பார்க்கப்படும் இராவணனை இலக்கிய, இதிகாசங்கள் சிவனருட்ச்செல்வனாய் போற்றுகின்றன. ஞானப்பால் அருந்திய சீர்காழிப்பிள்ளை யாத்த தீந்தமிழ் தேவாரம் இவ்வாறு உரைக்கிறது ",இராவணன் மேலது நீறு", சைவர்கள் நித்தம் தம் நெற்றியில் பூசி வழிபடும் திருநீற்றைப் போற்றி சம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகத்தில் தான் இந்த வரி வருகிறது. இராவணன் பொதுவாக அரக்கனாக சித்தரிக்கப் பட்டாலும் மிகச்சிறந்த சிவனருட்செல்வனாகவும் எண்ணற்ற நல்ல குணங்களை கொண்டு விளங்கினான் என்பதை மறுப்பதற்கில்லை.

திருக்கோணேச்சரத்தில் வணங்கிய இராவணன் சிலையும், அவனால் வெட்டப்பட்ட இராவணன் வெட்டும் நாம் அறிந்ததே, ஆனால் பல்லவ, சோழ, சாளுக்கிய கற்கோயில்களிலும் இராவணன் நிறைந்திருக்கிறான். பத்து தலைகளுடன் இருபது கரங்களால் கயிலையை தூக்கும் பட்டடக்கல் இராவண அனுகிரக மூர்த்தி சிற்பம் சாளுக்கிய கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டு. மாமல்லையிலும் அழகு வாய்ந்த இராவண சிற்பங்கள் உண்டு.

தென்னகம் சரி இராமனின் ராஜ்யமான வடக்கிலும் இராவணனை போற்றும் இடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. விந்திய சாத்புர மலைகளை ஒட்டியும் அதற்கு அப்புறமும் வாழும் பழங்குடிகளான கோண்ட் இன மக்கள் இராவணனை தெய்வமாக கொண்டாடுகின்றனர், அவர்கள் இராவணன் வம்சாவளி என்றும் நம்புகின்றனர். வடக்கே கன்யாகுப்ஜ ப்ராமணர்களிடமும் இராவண வழிபாடு உள்ளது. இராவணன் பிறந்த இடங்களாக இமய மலைச்சாரலில் சிலவிடங்கள் காட்டப்படுகின்றன. மண்டோதரி மத்திய பிரதேசத்தின் விதிஷாவில் பிறந்தவர் என்ற நம்பிக்கையும் உண்டு.

சங்கரன் கொடுத்த வாளும், யானை தந்தங்கள் புகாத மார்பும், நாரத முனிவர்களுக்கு இணையாகக் கல்வி பேசும் நாவும், சாம வேத பாண்டித்தியமும் இராவணனின் அணிகலன்கள்.

இலங்கையை இராவணன் சீரோடும் சிறப்போடும் ஆட்சிசெய்ததாக பலவிடங்களில் கம்பர் சுட்டுகிறார், இராமன் வாயிலாக கம்பர் சொல்லும் இலங்கையின் பெருமை

"இந்திரன் இருக்கை என்பர் இலங்கையை எடுத்துக் காட்டார்
அந்தரம் உணர்தல் தேற்றார் அருங் கவிப் புலவர் அம்மா!"

புலவர்கள் இலங்கையின் சிறப்பை அறிந்திருந்தால் உவமைக்கு தேவர்களின் அமராவதியை விட்டுவிட்டு இலங்கையையே எடுத்துக்காட்டாக கூறுவார் என்று இராமன் இலக்குவனும் சொல்லும் வரிகள்.

தேவர்கள் கூட இலங்கைக்கு வந்து தமக்கு ஏவல் பணிசெய்யும் அளவு தவ வலிமை கொண்ட வீரன் இராவணன் என்று அனுமன் நினைத்ததாய் கம்பர் சொல்லுவார். "மூன்று கோடி வாணாளும் , முயன்று பெற்ற பெரிய தவமும், முதல்வனால் முன்னாளில் எக்கோடி யாராலும் வெல்லப்படாய் என்று கொடுக்கப்பட்ட வரமும் , உலகனைத்தையும் செருக்கடந்த புயவலியும் " என இராவணனது பெருமையைக் கம்பநாடன் வியந்து எழுதுகிறார்.

விதிவசத்தால் மாண்ட மன்னர்களுள் இராவணனும் ஒருவன், பண்டைப் பெரும்புகழும்,வீரமும், பக்தி என பத்து சிறந்த அணிகலன்களை பத்து தலைகளாக கொண்ட தசானன் இன்றைக்கும் நீறணிந்த நெற்றியோடு சிவாலயங்களில் நிறைந்திருப்பது அவனின் பக்திக்கு கிடைத்த வெற்றியே !

**கயிலையங்கிரியைத் தூக்கும் இராவணன்**





# மாலை



**கே.எஸ்.சுதாகர்**

மதுரை மீனாட்சி அம்மன் கோவில். ஆனந்தனும் மல்லிகாவும் முதன்முறை தரிசனத்திற்காக வருகின்றார்கள். அம்மனுக்கு எத்தனை கோபுரங்கள். அவர்களை வசதியாக கோபுர வாசலுக்கு அண்மையில் இறக்கிவிட்டு, "நீங்கள் உள்ளே போய் தரிசனத்தை முடித்துக்கொண்டு வாருங்கள். நான் காரை எங்காவது ஓரிடத்தில் நிற்பாட்டிவிட்டு இந்த இடத்தில் வந்து நிற்கின்றேன்" சாரதி சொல்லிக்கொண்டே காரை வசதியாக நிறுத்துவதற்கான இடம் தேடிப் புறப்பட்டான்.

ஒரே சனக்கூட்டம். எங்கு பார்த்தாலும் மனிதர்கள் ஆரவாரமாகத் தெரிந்தார்கள். கோவிலுக்கு எந்தப் பக்கத்தால் போவது? கோபுரம் இருந்த திசை நோக்கி ஆனந்தனும் மல்லிகாவும் நடந்தார்கள்

"அம்மா... ஒரு முழம் பூ வாங்கிக்கோம்மா... உங்களுக்கு நல்ல அழகாக இருக்கும்" சொல்லிய திசை நோக்கித் திரும்பிப் பார்த்தாள் மல்லிகா. பத்து வயது மதிக்கக்கூடிய சிறுபெண்.

அப்படியே உருக்கி வார்த்த அம்மன் விக்கிரகம் போல அழகாக இருந்தாள். மல்லிகாவின் மனம் ஏக்கம் கொண்டது. ஒரு பிள்ளைக்காக எத்தனை வருடங்கள் காத்திருக்கின்றாள். எத்தனை கோவில்கள் ஏறி இறங்கிவிட்டாள். தமக்கான குறையினை அம்மனிடம் முறையிட வந்தவர்களல்லவா அவர்கள்.

பள்ளிக்குப் போகாமல் மாலை விற்பதற்கு அவளின் வறுமை தான் காரணம் என்பதை அவள் தோற்றம் சொல்லியது. கோவில் சூழல் என்பதால், குளித்து மங்களகரமாக கந்தையானாலும் கசக்கிக் கட்டி நிற்கும் அவளின் நெற்றியில் விபூதி சந்தனம். மனதில் அவளுக்கு ஆபரணங்கள் அணிந்து அழகு பார்த்தாள் மல்லிகா. தேவதைதான் அவள். அவளை நெருங்கினாள்.

"ஒரு முழம் என்ன விலை?"

"நூறு ரூபா தாங்க"

அவளிடமிருந்து ஒரு மாலையை வாங்கிச் சொருகியவாறு கோவிலை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். அவள் மல்லிகாவை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் ஏதோ தொக்கி நின்றது.

"அம்மா.... இன்னும் ஒரு மாலைதான் இருக்கு. அம்மனுக்குப் போட வாங்கிக்கோம்மா... இதையும் வித்துப்புட்டேன்னா நான் பள்ளிக்குப் போயிடுவேன்"

மல்லிகா அவளைச் சுற்றி வட்டமிட்டாள். ஆனந்தன் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தான். மாலையை வாங்கியபடியே, "பிள்ளைக்கு என்ன பெயர்?" மல்லிகா கேட்டாள்.

"அஞ்சலி"

அஞ்சலி அம்மனின் பெயரல்லவா! மல்லிகா வியந்தாள்.

"சரி... பின்புறம் திரும்பிக்கோ.."

அஞ்சலி தயங்கியபடியே இருவரையும் பேந்தப் பேந்த முழித்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.


"திரும்பிக்கோம்மா..." திரும்பவும் மல்லிகா சொன்னாள்.

அவள் மெதுவாகத் திரும்பி மல்லிகாவுடன் ஒட்டி நின்றாள். ஒரு பிள்ளையின் நெருக்கத்தை மல்லிகா உணர்ந்தாள். அவளின் தலையில், ஒரு அம்மாவின் கரிசனையுடன் அந்த மாலையைச் சூட்டினாள்.

"அப்ப சாமிக்கு?" சிறுபெண் கேட்டாள்.

"நீதானடி என்ரை அம்மன்" மல்லிகாவின் கண்களில் இருந்து தாரையாக நீர் வழிந்தது. அஞ்சலியின் கண்களில் இருந்தும்.






# குமாரியான குழந்தை

மூனா

ஒருவரை ஒருவர் வேலைத்தளத்தில் கிண்டல் அடிப்பது வழமைதான். ஆனாலும் மேற்கத்தைய நாடுகளில் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் ஆசிய நாட்டவரைக் கிண்டலடிப்பது கொஞ்சம் கூடத்தான்.

யேர்மனியின் ஸ்ருட்கார்ட் விமான நிலையத்தில் மற்றைய விமான நிலையங்களில் உள்ளது போன்று நவீன தொழில்நுட்பத்தில் கழிப்பிட அறைகள் இருக்கின்றன. அந்தக் கழிப்பிட அறைகளின் வரிசையின் இறுதியில் ஆசியநாட்டவருக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கழிப்பிட அறை ஒன்றும் இருக்கிறது.

“ஸ்ருட்கார்ட் எயார்போட்டுக்குப் போனால், நீ கடைசி ரொயிலற்றுக்குத்தானே போவாய்?” என்று வேலையிடத்தில் என்னைச் சீண்டிப் பார்ப்பது அவர்க ளக்கு அன்று இனிமையாக இருந்தது.

'குந்தி இருப்பதே மலம் கழிப்பதற்கான சிறந்த முறை' என்ற ஆய்வுத் தகவலைத் தேடி எடுத்து வந்து அவர்களுக்குக் காட்டியதற்குப் பிறகு அவர்கள் ஸ்ருட்கார்ட் எயார்போட்டை மறந்தே போய் விட்டார்கள்.

சமீபத்தில் வந்த ஒரு பத்திரிகைச் செய்தியை சென்ற கிழமை எனது பார்வைக்குத் தந்து “குழந்தைப் பருவத்தில்தான் மனிதனின் எதிர்கால ஆரோக்கியம் நிச்சயிக்கப் படுகிறது. குழந்தையாக இருக்கும் போது, விரைவாகக் கற்கும் திறன் அதனிடம் இருக்கிறது. ஒரு குழந்தை வளர்வதற்கு பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது. இதை எல்லாம் யோசிக்காமல் மதங்களின் பெயரால் ஏன்தான் குழந்தைகளின் வாழ்க்கையை வீணடிக்கிறார்களோ? இவர்களை எல்லாம் குழந்தைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்” என்று காதுக்குள் கத்தி விட்டுப் போனார்கள்.

நாய்க்கு எங்கே அடித்தாலும் அது காலைத்தான் தூக்கும். இவர்களுக்கு என்னைக் கிண்டலடிக்க ஏதோ ஒன்று கிடைத்து விட்டது என்பது புரிந்தது. “பாரம்பரியம் என்று எல்லா மதத்தவர்களும் தேவையில்லாத சில விடயங்களைத் தலையில் தூக்கிக்கொண்டுதான் திரிகிறார்கள்” என்று சொல்ல எத்தனித்தேன். ஆனாலும் „முதலில் செய்தியை வாசி“ என்று உள்ளுணர்வு சொல்ல பத்திரிகையைக் கையிலே எடுத்தேன்.

நேபாள நாடு ஏறக்கக்குறைய யேர்மன் நாட்டின் பாதி நிலப்பரப்பைக் கொண்டது. இங்கேதான் உலகின் மிகப் பெரிய மலையான இமயமலையின் பெரும்பகுதி இருக்கிறது.

நேபாளத்தில் காட்டமண்டு நகரத்தில் தலேயூ பவானி (Taleju Bhawani) என்ற ஆலயம் உள்ளது. இது 1564இல் மகேந்திர மாலா என்ற அரசனின் ஆட்சியில் அரச குடும்ப வழிபாட்டுக்காக கட்டப் பட்டிருக்கிறது. வருடத்திற்கு ஒருமுறைதான் வெளியார் னத்துக்காக இந்த ஆலயம் திறக்கும்.

இந்த ஆலயத்துக்கு அவதார கடவுளாக குமாரி தேவி என்ற சிறுமி ஒருவரைத் தெரிவு செய்து வழிபடும் பாரம்பரிய முறை ஒன்று அங்கே இருக்கிறது.



**குமாரிதேவியாக இருந்து குமரியாகப் பூப்படைந்த பின்**

பற்கள், குரல், விழியின் நிறம், தொடைகளின் அழகு… என்று 32 அங்க இலட்சணங்களும் ஒருங்கே பெற்ற ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தில் பிறந்த சிறுமியே குமாரிதேவியாக தெரிவு செய்யப் படுவார்.
இந்தச் சிறுமியான குமாரிதேவி, குமரியாகும் நேரத்தில் அவதார தெய்வம் எனும் தகுதியை இழந்து விடுவார்.
கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டால், அல்லது காயங்கள் ஏற்பட்டு அதிக இரத்தம் வெளியேறும் நிலை வந்தால் மட்டுமே குமரியாகும் முன்னரே குமாரி தேவி கடவுள் என்ற நிலையில் இருந்து நீக்கப்படுவார். அதுவரை அவரை அவரது பெற்றோர்களே நெருங்க முடியாது.

குமாரிதேவி வணங்குதலுக்குரிய கடவுளானாலும் அவருக்குக் கல்வி கற்பிக்க ஒரு ஆசிரியர் நியமிக்கப் படுவார். „நான்கும் மூன்றும் எவ்வளவு?“ என்று ஆசிரியர் கேள்வி கேட்கும் போது குமாரி „பதினேழு“ என்று பதில் சொன்னால் அதற்கு ஆசிரியர் சரியென்றுதான் தலையாட்ட வேண்டும். விடை பிழையானது என்று சொன்னாலோ அல்லது இதுதான் சரியானது என்று திருத்திச் சொன்னாலோ அது தெய்வக் குற்றமாகி விடும். இப்படி ஆசிரியரே பணிந்து போகும் நிலை இருந்தாலும் பெற்றோர் களுடன் இணைந்து வாழ குமாரி தேவியால் அவர் பூப்படையும் காலம் வரை முடியாது.



அதேநேரம் வெளியாருடனான தொடர்புகளும் கிடையாது. குமாரிதேவியின் கால்கள் கூட நிலத்தில் படுவதற்கு அனுமதி இல்லை.



**குமாரிதேவியாக அன்று இருந்தவர்களில் சிலர்....**

வருடத்தில் நடக்கும் பதின்மூன்று புனித நாட்களில் மட்டுமே குமாரிதேவியின் தரிசனம் மக்களுக்குக் கிடைக்கும். அதோடு செப்டெம்பரில் நடக்கும் ஒன்பது நாள் விழாவில் (நான் நினைக்கிறேன் ஒருவேளை அது நவராத்திரி விழாவாக இருக்கலாம் என்று) நகைகள் அணிந்து தேரில் பவனி வருவார்.

இந்த வருடம் செப்ரெம்பரில் ரிஸ்ணா சக்யா (Trishna Shakya) என்ற மூன்று வயதுக் குழந்தை குமாரி தேவியாகத் தெரிவு செய்யப் பட்டிருக்கிறாள்.



“தமது குழந்தையின் வாழ்வை வளப்படுத்துவது தானே பெற்றோரின் கடமையாக இருக்க வேண்டும்” என்று இந்தத் தடவை எனது வேலையிடத்தில் அவர்கள் என்னைக் கேட்ட பொழுது என்னால் அவர்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.



**அன்றும் இன்றும்**

Preeti Shakya's feet didn't touch the ground outside her palace until she was 11. She became a goddess at three years old, but when puberty hit, it was back to an anonymous life in the suburbs.




யேர்மனியில் 15.09.2019 அன்று நடைபெற்ற
வெற்றிமணி வெள்ளிவிழாவில் திருத்திய நாட்டியாலய மாணவர்கள் வழங்கிய நடனம்




# எவ்வளவு நேரம் வணங்குகிறோம் என்பதா? முக்கியம் இல்லவே இல்லை என அடித்துக்கூறிய சீரடி!

சிவப்பிரியன்

கடந்த 08.10.2019 வியதசமி தினத்தில் இந்தியாவில் மகாராஷ்ரா மாநிலத்தில் சீரடி நகரம் பெரும் விழாக்கோலம் பூண்டது. அன்று சீரடி பாபா அவர்கள் சமாதி எய்தியதினம். எந்தவித முன்திட்டமோ அல்லது அன்று சமாதியடைந்த தினம் புனிதமான நாள் என்று கருதியோ அன்று அங்கு செல்லவில்லை. ஆனால் யாவும் இயல்பாகவே நடந்தது.

07.10.2019 திங்கள் காலை டெல்லியில் இருந்து சீரடி விமானநிலையத்தில் வந்து இறங்கினோம். தாயகத்தில் பலாலி விமானநிலையத்தைவிட பாதியும் இல்லை. ஆனால் பலாலி விமானநிலையத்தை ஞாபகப்படுத்தும் வண்ணம் மண்வாசமும் சூழலும் அமைந்திருந்தது. கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழி ஒவ்வொரு காலகட்டத்திலும் அதன் பொருள் எதோ ஒருவிதத்தில் பொருந்தத்தான் செய்கிறது.

இங்கு மக்களின் வருவாய் இந்தக்கோவிலைச் சுற்றியே அமைந்துள்ளது. ஒரு கோவிலுக்காக ஒரு விமான நிலையத்தையே உருவாகியுள்ள ஒரு கிராமம் அது என்றால் மிகையாகாது. விமான நிலைய வாசலில் ரைக்சி வியாபாரம் ஆரம்பித்து கோவில் எல்லை வரை தொடர்கிறது.

கோவிலை அடைந்ததும் சீரடியின் புனிதம் மலர்கிறது. செருப்புக்கள் பாதுகாப்பாக வைக்க சில இடங்கள் உண்டு 15, முதல் 20 ஆயிரம் என மக்கள் கூடும் இடத்தில் இது சாத்தியமா எனக்கேட்டால் சாத்தியம் என்றே கூறலாம். கோவிலுக்கு வரும் மக்கள் அனைவரும் செருப்பு பாதுகாக்கப்படும் இடத்தில் வைப்பது குறைவு, அப்படி வைத்தாலும் அங்கு நிற்பவர்கள் நீங்கள் சிறுதொகை கொடுத்தாலும் சிரித்த முகத்துடன் வாங்குவார்கள். கோவிலுக்குள் வியாபாரம் இல்லை. மீதி மக்கள் செருப்புக்களை கரையோரமாக வைத்துவிட்டுப் போகிறார்கள். பின்பு வந்து மாட்டுகிறார்கள். ஆனால் எவரது செருப்பும் தொலைந்ததாகத் தெரியவில்லை. இது ஒரு அதிசயம்தான்.

இன்னுமொன்று எவரும் கைத்தொலைபேசி எடுத்துச் செல்ல முடியாது, கமரா மற்றும் விடியோ எடுக்கமுடியாது. இச்செயல் எமக்கு தாயகத்தில் அன்று பார்த்த மக்களை கண்முன் நிறுத்தியது. வணங்கும் போதும் இருகைகளுக்குள் பாம்பு படம் (Foto) எடுப்பதுபோல் எந்தக்காட்சியும் அங்கு இல்லை. இதனை புலம்பெயர்ந்து வாழும் நாமும் ஆலயங்களில் கடைப்பிடிக்க வேண்டும். கைத்தொலைபேசி அவசியம் ஆனால் படம் எடுப்பது அவசியம் அல்ல.

சாதாரணமாக மக்கள் வரிசையாக நின்று போவது என்றாலும் காரியாலயத்தில் பாஸ் எடுக்கவேண்டும். அதனை எடுத்துக் கொண்டு வரிசையில் நின்று சித்தர் பாபாவிற்கு ஆராதனை நடைபெறும் இடம்செல்லவேண்டும். அதற்கான ஒழுங்கு பிரமாதமாக அமைந்திருக்கிறது. அதிகாலை 3.00 மணிக்கு சென்று பாஸ் எடுத்து வரிசையில் நின்றால் ஒவ்வொரு கட்டம் கட்டமா மக்கள் நகருவார்கள்.

முன்னே பாஸ் ஸ்கேன் செய்ப்பட்டு பாதுகாப்புக்கருதி விமான நிலையத்தைப்போன்று சோதனையும் இட்டு உள்ளே விடுவார்கள். இதன் மூலம் அடியவர்களது எண்ணிக்கையும் தெரியவரும். அதற்கேற்ப உள்ளே அனுமதிப்பார்கள்.

என் வாழ்வில் அதிக நேரம் (கிட்டத்தட்ட4 மணிநேரம்) வரிசையில் நின்றது அன்றுதான். ராஜா தியேட்டரில் அன்று சிவாஜி நடித்த தங்கை படத்திற்கும், ராணி தியேட்டரில் அடிமைப்பெண்ணிற்கும் வரிசையில் நின்றதை இங்கு சேர்க்கவில்லை.
வரிசையாக நின்று உள்செல்ல அதிக நேரம் செல்வதால் மக்களுக்கு வசதியாக இடை இடையே இருப்பதற்கு வாங்கும், தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்ட ஒதுக்குப்புறமும் சிறுநீர் கழிப்பதற்கு இடமும் யதார்த்தமாக அமைத்தும் உள்ளார்கள். மக்களை ஒழுங்கு படுத்த கடமையில் ஈடுபட்டு இருக்கும் பொலிசாரும் ஆலயத் தொண்டர்களும் அன்பாக மக்களை விரைவு படுத்தியவண்ணம் இருந்தனர். பாபாவின் இடத்தை அடைந்ததும் நான்கு மணிநேரம் காத்திருந்து 30 விநாடிக்குள் வணங்கி திருப்தியுடன் சென்ற மக்களின் பண்பு மனதைத்தொட்டது. அதிக நேரம் வணங்குவதும், நீட்டோலையாக வேண்டதல்களை கேட்பதும் அங்கு இடம்பெற்றதாக அத்தினத்தில் காணமுடிய வில்லை. ஒரு விநாடிக்குள் இந்த உலகை வந்தடைந்த எமக்கு வேண்டுதல்களுக்கு மட்டும் ஏன் இந்தளவு நேரம் என்று கருதி மக்களை விரைவுபடுத்தியிருக்கலாம்.
தரிசனம் என்பது மணிக்கணக்கில் அல்ல அது மனக்கணக்கோடு கூடியது.





சீரடி கிராமம் செவ்வந்திப்பூக்களின் தோட்டம். அதனை வாகனங்கள் முதல் கடை வாசல் வரை காணலாம். கோவில் சூழல் மிகவும் சுத்தமாகப் பேணப்படுகின்றது. ஒவ்வொருவரும் அதில் மிகுந்த கவனம் எடுக்கின்றனர். வழிபாடு என்பது இருகைகள் கூப்பி வணங்குவதுமட்டுமல்ல அந்த இருகைகள் வழிபாட்டின் பின் என் செய்கின்றன என்பதிலும் வழிபாடு தொடர்கிறது. ஆலய நிர்வாகம் மக்கள் விரைவாகச் சென்று தரிசனம்பெற பிரத்தியேகப்பாஸ் வழங்கப்படுகிறது. 200 இந்தியன் ரூபாய்க்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக விரைவாகச் செல்லும் பாஸ்க்களையும் வழங்குகிறது.





## சீரடி விமானநிலையம்

இது காலை 6.00 மணிக்குபின்னே நடைமுறையில் உள்ளது. விசேட தினங்களில் அதிகாலை 4.30 மணிக்கு பூசைகளுக்கு கிடையாது. விரும்பினால் சாதரண வரிசையில் நிற்கவேண்டும்.

சீரடி பாபா கோவிலைத் தவிர அதனைச்சுற்றி அமைந்துள்ள இடங்கள் எல்லாம் பாபா பெயரில் நடைபெறும் வர்த்தகமாகவே தெரிகிறது. சில நல்லவற்றை பார்க்கும்போது நாமும் ஏன் இப்படி ஒன்று செய்யமுடியாது என்று தோன்றுவது இயல்பு. ஈழத்தமிழர்கள் சைவமாகட்டும், தமிழாகட்டும் அதற்கு கொடுக்கும் கௌரவம் தனித்துவமானது. நம்மவர்கள் மத்தியிலும் பல பெரியவர்கள் ஞானிகள் வாழ்ந்து சென்று உள்ளனர்.







யோகர் சுவாமிகள்

யோகர்சுவாமிகள் அவர் எத்துணை ஞானம் பெற்றவர். இவர்களை நாம் மறக்கமுடியாது. காசிக்குபோய் காசி நாதரைக்கண்டேன் என் நெஞ்சுக்குள் என்றார். எதனையும் பகுத்து அறிந்து செய்பவர்கள் வாழ்ந்த மண் எம் தாய் மண். இன்று முகப்புத்தகம் வட்சப் என தொழில் நுட்பம் எமது மண்ணின் பண்பாடுகளின் ஆணிவேரை உலுப்புகின்றது.
சீரடி ஒரு படிப்பினையைத் தந்தது. பாபாவின் கோவில் சூழல் அழகு. கட்டுப்பாடுகளை கனிவுடன் நடைமுறைப்படுத்தும் பண்பு. எனக்குத்தான் தெரியும் என்று இல்லாமல் தெரிந்ததை மட்டும் சொல்லும் மக்கள்(கோவிலுக்குள்)

மனதை மட்டுமல்ல உலகையும் மாசுபடுதும் பொருட்கள் தெருவில் வீசக்கூடாது. (பொலித்தீன் பாக்) முதலாவது தடவை மீறினால் 5.000 இரண்டாவது தடவை மீறினால் 10,000 மூன்றாம் தடவை மீறினால் 25,000. அது மட்டுமல்ல 3 மாத சிறை.

பி.குறிப்பு
மாலை 6 மணிக்கும் 9.00 மணிக்கும் இடையில் பாபா தெருவலம் வருவார் என அங்கு கூறப்பட்டது. 4 மணிநேரம் நின்று உள்ளே மிக அருகில் சென்று ஆராதனைகளைப் பாரத்தோம். அது போதும் என்ற திருப்தியுடன் தங்கியருந்த Hotel க்கு திரும்பிக்கொண்டு இருந்தேன். அப்போது Hotel க்கு சற்று தொலைவில் ஆரம்பமாகிய ஊர்வலம் தற்போது Hotel வாசலை நெருங்கியது. பாபா தரிசனம் போதும் என்று திரும்பினாலும் பாபா என்னைத்தேடி வருகிறார் பார்த்தீர்களா? என இதனை அற்புதமாக்க என் மனம் உடன்படவில்லை.


கடவுள் எமக்கு அளித்த வாழ்வே அற்புதமானது அல்லவா! ஒவ்வொரு கணமும் சிறப்பானது, அற்புதமானதே!




யேர்மனியில் 15.09.2019 அன்று நடைபெற்ற
வெற்றிமணி வெள்ளிவிழாவில் ஆடற்கலாலய மாணவர்கள் வழங்கிய நடனம்

# அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில்



திருச்சி உச்சிப் பிள்ளையார் கோயில்

பொலிகையூர் ரேகா B.com.M.phil

இந்தியாவில் தமிழ் நாட்டின் மையப் பகுதியான திருச்சி மாவட்டத்தில் வியக்க வைக்கும் அழகுடன் அமைந்திருக்கின்றது இந்த உச்சிப் பிள்ளையார் கோயில். சத்திரம் பகுதியை அண்மித்த இடங்களில் எங்கிருந்து பார்த்தாலும் தனக்கேயுரிய கம்பீரத்துடன் தெய்வீக ஒளி பரப்பியபடி பல புதுமைகளைக் கொண்டு காட்சியளிக்கின்றது. 273 அடிகள் உயரத்தில் அமைந்திருக்கும் இந்தப் பழம்பெரும் கோயில் அந்தச் சுற்றுப்புறப் பகுதிகளில் செல்வோரை வியப்புடன் பார்க்க வைக்கத் தவறியதில்லை.

கோயிலின் அமைப்பே வியப்பென்றால் அதையும் தாண்டி அது தோற்றம்பெற்ற காலப் பகுதி இன்னும் வியப்பிற்குரியது. 3400 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்தப் பாறைகள் கருங்கல் பாறை வகையைச் சார்ந்தது. கால மாற்றங்களால் இவை செம்பழுப்பு நிறமாகத் தோன்றினாலும் சார்னோகைட் வகையான கறுப்பு நிறப் பாறைகள் ஆகும்.

காவிரியின் தென்கரையில் அமைந்திருக்கும் இந்த மலை பல வரலாற்றுச் சிறப்புகளின் சாட்சியாக அழகிய கோட்டைக் கோயிலாக நிமிர்ந்து நிற்கின்றது.

எப்போதும் பரபரப்பாக இயங்கும் பெரிய கடை வீதிகளையும், நகரின் பெரும்பாலான வீதிகளையும் அமைதியாக வேடிக்கை பார்த்தபடி உயர்ந்து நிற்கின்ற மலைக் குன்றானது மூன்று தளக் கட்டட அமைப்பைக் கொண்டு வியத்தகு கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இறைவர் : தாயுமான ஈசர்
இறைவி : மட்டுவார் குழலம்மை
தலவிநாயகர்: செவ்வந்தி விநாயகர்
நுழைவாயில் விநாயகர்: மாணிக்க விநாயகர்
மலைமேல்: உச்சி விநாயகர்
தலமரம்: வில்வ மரம்
தல தீர்த்தம்:
பிரமதீர்த்தம்,சிவகங்கை,காவிரி, நன்றுடையான், தீயதில்லான்

இத்தலம் திரிசிரன் என்ற அரக்கன் வழிபட்டதால் திரிசிராமலை, திரிசிரபுரம்,திரிசிரகிரி எனவும் மூன்று உச்சிகளை உடையதால் முத்தலை மலை எனவும் பிரமனால் வழிபடப்பட்டதால் பிரமகிரி எனவும் தொலைவிலிருந்து பார்க்கும்போது ரிபம் (இடபம்) போன்று தோன்றுவதால் ரிபாசலம் என்றும் அழைக்கப் பெற்றுள்ளது. திருக்கைலாய மலையின் தொடர்பு காரணமாக தென்கயிலாயம் என்றும் அழைக்கப்படுகின்றது. சிலையில் கல்லில் குடைந்து அமைக்கப்பட்டதால் சிலைப்பள்ளி, சிலாப்பள்ளி எனவும் சிரா முனிவர் வாழ்ந்ததால் சிராப்பள்ளி என்று அழைக்கப்பட்டது.
மலைக்கோட்டை வாசல் வழியாக நுழைந்து சென்றோமானால் அங்கே தெப்பக்குளம் அமைந்திருக்கும். தல தீர்த்தங்கள் பல கூறப்பட்டாலும் தலத்திற்கு அருகாமையில் அனைவருக்கும் புலப்படும்வண்ணம் இந்தத் தெப்பக்குளம் அமைந்துள்ளது.

சில பெரிய கடைகளைக் கடந்து சென்றதும் இத் திருத்தலத்தின் நுழைவாயில் அமைந்துள்ளது. இங்கே பல கடைகள் அமைந்துள்ளன.

இது முன்னர் ஆயிரங்கால் மண்டபமாக இருந்ததாகவும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வெடிப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வெடி விபத்தில் சேத மடைந்த பின்னர் கடைகள் நடத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

கடைகளைக் கடந்து சென்றதும் கீழ்த் தளமான மாணிக்க விநாயகர் சந்நிதி அமைந்திருக்கும். தொடக்கத்தில் இந்த விநாயகர் சித்தி விநாயகர் என்றே அழைக்கப்பட்டார்.

மாணிக்கம்பிள்ளை என்ற அன்பர் செய்த திருப்பணிகள் காரணமாக இது நாளடைவில் மாணிக்க விநாயகர் என்று அழைக்கப்பட்டது.



மாணிக்க விநாயகர்

இங்கிருந்தே படிக்கட்டுகள் தொடங்குகின்றன.32 படிகளைக் கடந்ததும் யானை கட்டும் இடமும் ஆலயத்திற்குரிய சீட்டு வாங்கும் இடமும் அமைந்திருக்கும். அங்கிருந்து தாயுமானவர் சந்நிதி வரை படிகள் மூடப்பட்ட மலைப் பகுதியில் அமைகின்றன.

ஏறிச் செல்லும்போது இடது புறத்தில் நூற்றுக்கால் மண்டபமும், வலது புறத்தில் மீனாட்சி சுந்தரேசுவரர் சந்நிதியும் அமைந்திருக்கும். கோயில் விழாக்கள்,சொற் பொழிவுகள் சைவ சமயப் பயிற்சி வகுப்புகள் ஆகியன இங்கு இடம்பெறுகின்றது.





258 படிகள் கடந்து சென்றதும் இரண்டாம் தளத்தில் தாயுமானவர் சந்நிதி அமைந்திருக்கும். செவ்வந்திப் பூக்கள் கொண்டு வணங்கப்பட்டதால் செவ்வந்தி நாதர் என்று இவ்விறைவன் அழைக்கப்பட்டார். தேன் நிறைந்த மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிந்துள்ள நீண்ட கூந்தலை உடையமால் இறைவி மட்டுவார் குழலம்மை என அழைக்கபட்டார்.

காவிரிக் கரையில் வெள்ளம் கரை புரண்டு ஓடியதால் மகளின் பிரசவத்திற்குச் செல்ல முடியாத தாய்க்குப் பதிலாக இறைவன் அப் பெண்ணுக்குத் தாயாகச் சென்று பிரசவம் பார்த்த காரணத்தால் தாயுமான சுவாமிகள் என்று அன்று முதல் அழைக்கப்படுகின்றார்.

கோயில்களில் சிவன் சன்னதிக்கு எதிரில்தான் கொடிமரம் இருக்கும். ஆனால், இக்கோயிலில் சிவனுக்குப் பின்புறம் கொடிமரம் இருக்கிறது. முன்பு இக்கோயிலில் சிவன் சன்னதி கிழக்குத் திசையை நோக்கி இருந்தது. எனவே, பிரதான வாசலும், கொடிமரமும் கிழக்குத் திசையில் அமைக்கப்பட்டது. இறைவனுக்காக அமைக்கப்பட்ட சாரமா முனிவரின் தோட்டத்தில் பூ வாணிகம் செய்பவன் பூக்களைத் திருடிச் சென்று அரசனது தேவிக்குக் கொடுத்து வந்தான்.அரசனிடம் முறையிட்டும் அரசன் தண்டிக்காததால் இறைவனிடம் முறையிட்டார். மன்னனைத் தண்டிக்க சிவன் மேற்குத் திசை நோக்கித் திரும்பி மண்மாரி பொழியச் செய்து உறையூர் முழுதும் அழித்து அரசனையும் அழித்தார். அவ்வாறு தண்டிக்க மேற்குத் திசை நோக்கித் திரும்பி விட்டதால், சன்னதி வாசலும், கொடி மரமும் அங்கேயே நிலைத்து விட்டது.
இங்கு அமைந்துள்ள சித்திரமண்டபத்தில் அழகிய கற் சிற்பங்களும், ஓவியங்களும் நிறைந்திருக்கின்றன.சிவனின் 25 மூத்த ஓவியங்கள்,சாரமா முனிவர் செவ்வந்தி மலர் பயிரிட்டு மாலை தொடுத்துச் சிவனுக்குச் சாத்தும் காட்சிகள், மார்க்கண்டேயனுக்கு அருளிய காட்சி, செட்டிப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்து தாய் வந்ததும் இடப வாகனத்தில் காட்சியளித்த காட்சிகள், ஊர்த்துவ தாண்டவம் எனப் பல புராணக் காட்சிகள் கண்கவர் வண்ணம் வரையப்பட்டுள்ளது. தூண்களின் மேற்பகுதியில் கல் உருண்டைபளுடன் யாளிகள், கல் வளையங்களாலான சங்கிலிகள் ஆகியன அமைந்துள்ளன.



நூற்றுக்கால் மண்டபம்

தாயுமானவர் கோயிலின் வெளியே வந்ததும் திறந்த வெளியாகப் படிகள் தொடங்குகின்றன. உச்சிப் பிள்ளையார் நோக்கி ஏறத் தொடங்குகையில் இடது பக்கத்தில் குடைவரைக்கோயில் அமைந்திருக்கும். குடைவரைக்கோயில் என்பது கற்பாறையால் ஆன மலையைக் குடைந்து அமைக்கப்படுவதாகும். இக்கோயிலில் இரண்டு குடைவரைக்கோயில்கள் உள்ளன. ஒன்று மலையடிவாரத்திலும் மற்றொன்று தாயுமான சுவாமி கோயிலுக்கு வெளிப்புறத்தில் உச்சிப் பிள்ளையாருக்குச் செல்லும் வழியில் அமைந்திருக்கும். இதில் மேற்புறச் சுவரில் கங்காதர மூர்த்தியின் புடை சிற்பம் அமைந்துள்ளது. பல்லவ காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துகாட்டாக விளங்குகின்றது. மக்களின் சீர்கேடான நடவடிக்கைகளால் இக் குடைவரைக் கோவில் தற்போது மூடப்பட்டுள்ளது.

மற்றொரு குடைவரைக்கோயில் மலையடிவாரத்தில் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தெருக்களில் திருக்கோயில் நுழைவாயில் மேற்புறத்தில் உள்ளது. இது மின் மண்டபம், கருவறை என இரு பகுதிகளையுடையது. இங்கு வடக்குச் சுவரில் நின்ற கோலத்தில் விநாயகர், முருகன், பிரமன்,திருமால், கொற்றவை திருமேனிகள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. இக் குடைவரைக்கோயில் தொல்பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. சிற்பக் கலைக்கும்,கட்டடக் கலைக்கும் மாபெரும் எடுத்துக்காட்டாக இக் குடைவரைக் கோயில்கள் அமைந்துள்ளன.

உச்சி மலைக்குச் செல்லும் வலப்புறப் பாதையில் பதினாறுகால் மண்டபம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. 1630 ஆம் ஆண்டு தளவாய் முதலியாரால் கட்டப்பட்டது.
மலைப் பாதையிலே பதினாறு கால் மண்டபத்தைத் தொடர்ந்து மணி மண்டபம் அமைந்துள்ளது.
இது உறையூரைச் சேர்ந்த உலகநாதச் செட்டியார் முயற்சியால் திருச்சி நகர மக்களின் உதவியோடு 1918 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள மணி முழுவதும்


2 1/2 டண் எடையுள்ள பித்தளை வெண்கலத்தாலானது. 4 அடி 8 அங்குல நீளமும் 4 அடி 6 அங்குல குறுக்களவும் கொண்டது. இம்மணியோசை பல மைல் தூரம் வரை கேட்கக்கூடியது. விடியற்காலை 4,6 மணி காலை 10,12 மணி, மாலை 6 மணி, இரவு 10 மணி ஆகிய நேரங்களில் இது ஒலிக்கப்படுகின்றது.
இதைக் கடந்து சென்றால் சிலுசிலுவெனக் காற்று முகத்தில் அடிக்க 145 படிகள் மட்டுமே எஞ்சியிருக்கும் உச்சிப் பிள்ளையாரைச் சென்றடையலாம்.
அந்தப் பகுதியிலிருந்து பார்த்தால் விமானத்திலிருந்து பார்ப்பது போலக் கட்டடங்கள் அழகாகக் காட்சியளிக்கும்.
இரவு நேரங்களில் சென்றால் இன்னும் சிறப்பாக ஒளிர் விளக்குகளில் ஒளிர்கின்ற பிள்ளையாரையும் திருச்சி மாநகரையும் கண்குளிரக் காணலாம்.



முன்னர் மேற்கூரையின்றி வெளியாகக் காணப்பட்ட அந்தப் படிகளின் பகுதி தற்போது செயற்கைக் கூரைகளால் அமைந்து பக்தர்களை மழை வெயிலிலிருந்து பாதுகாக்கின்றது. என்னதான் வசதியாகக் கூரை அமைக்கப்பட்டிருந்தாலும் கீழிருந்து 145 படிகள் தாண்டி மலையுச்சியில் அமர்ந்திருக்கும் பிள்ளையாரை ஆசைதீரப் பார்க்க அந்தக் கூரையே தடையாக இருப்பது போலத் தோன்றுகின்றது.

சிறியளவிலான இப்படிகளில் ஏறிச் சென்றால் உச்சிப் பிள்ளையாரைக் காணலாம். பள்ளிகொண்டநாதரை இலங்கைக்கு எடுத்துச் செல்ல விரும்பிய விபீசணன் காலைக் கடன் கழிக்கச் சென்றபோது அங்கு சிறுவனாகத் தோன்றி அச்சிலையை வாங்கித் தரையில் வைத்து விபீசணனின் கோவத்துக்கு ஆளாகிக் கொட்டு வாங்கிய வடுவோடு அமர்ந்திருப்பதாகக் கூறுவர். உச்சிப் பிள்ளையாரின் தலையில் சிறு புடைப்போடு உள்ளதாகக் கூறப்படுகின்றது.
மேலேயிருந்து கோயில் சாளரம் வழியாகப் பார்த்தால் திருவரங்கம், காவிரி, திருச்சி நகரின் மொத்த அழகையும் ஆசைதீரக் கண்டு களிக்கலாம். ஏறிய களைப்புத் தீரக் காற்றின் வீச்சு இதமாக நம்மைத் தாக்கிச் செல்கையில் குளிரூட்டிகளும் தோற்றுவிடும்.
இறங்கிச் செல்கையில் மணிமண்டபம் அருகாமையிலிருக்கும் பிரசாதக் கடைகளில் சிலைகள், பூசைப் பொருட்களோடு மட்டுமன்றி பொங்கல், புளியோதரை, லட்டு ஆகிய உணவுகளையும் வாங்கி அங்கேயுள்ள இருக்கைகளிலோ தரையிலோ அமர்ந்து திருச்சியின் அழகைத் திருவரங்கக் கோபுரங்களோடு இரசித்தவண்ணம் உண்டு மகிழலாம்

பல ஆட்சியாளர்களின்அரணாக விளங்கி இன்றும் சாட்சியாக நிலைத்து நிற்கும் இந்த உச்சிப் பிள்ளையார் தெய்வீக அருளுக்கு மட்டுமன்றிக் கட்டடக் கலை,சிற்பம்,சொல்லப்படாத இரகசியங்கள் எனப் பல வியப்புக்குரிய பெருமைகளுக்குச் சொந்தமானதாய் கம்பீரமாய் நிற்கின்றது.



# மக்களின் அறியாமை என்று நீங்கும் பெண்களின் வேதனை என்று குறையும்



புருஷன் கூட வாழுற நானே ரூ.500 க்கு தான் புடவை எடுக்குறேன்.புருஷன் கூட வாழாத உனக்கு எதுக்கு 1000 ரூபாய்ல புடவை?

புருஷன் கூட வாழுற நானே வாரம் ஒரு நாள் தான் பூ வாங்கி வக்குறேன்.வாழாத உனக்கு டெய்லி பூ எதுக்கு?யாருக்காக தான் வக்குறீயோ?

இப்பிடி வக்கிர வார்த்தைகளை பெரும்பாலும் உதிர்ப்பது நாம் தான் பெண்களே.சாட்சாத் நாம் தான் .
கோடி எண்ணிக்கையில் வாழும் பெண்களில் இலட்சங்களில் பெண்கள் தான் முற்போக்கு சிந்தனையோடு தங்களுக்கு பிடித்த வாழ்க்கை, சுதந்திரமான அறிவு என்று ஒரு புரிதலுடன் அழகாக தங்கள் வாழ்வை வாழ்கிறார்கள்.மீதம் உள்ள பெண்களில் மற்றவர்களின் நிலை தான் மேற்கண்ட புரிதல்கள்.

அப்போது என்ன? கணவன் இருந்தால் பூ வைத்துக் கொள்ளலாம்.காஸ்ட்லி புடவைக் கட்டி கொள்ளலாம்.
ஆனால் கணவன் இல்லாமல் வாழும் ஒருவர் இதை எல்லாம் தொடக் கூடக் கூடாதா?

அவர் விட்டு ஓடி இருக்கலாம், பிரிந்துச் சென்று இருக்கலாம் (அ) ஏதோ விபத்தில் மரணம் அடைந்த ஒருவராய் கூட இருக்கலாம். ஆனால் அந்த ஒருவர் ஏதோ காரணத்திற்காக இல்லாமல் போனால் நாமும் நம் அடையாளங்களை ஆசைகளை விருப்பங்களை காணாமல் தொலைத்து விட வேண்டும். இல்லையா? தொலைத்து விட வேண்டும் என்று நினைப்பதால் தான் நாமே நம்மை அறியாமல் மற்றவர்களை வசைப்பாடி அவர்களின் மனதைக் குத்தி கூறுப் போடுகிறோம். ஆண்களிடம் இருந்து சுதந்திரம் வேண்டும் என்று மல்லுக்கட்டிக் கொண்டுப் போராடுகிறோம். என் சுதந்திரம் எனக்கு வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் இதற்கெல்லாம் அடிப்படைப் புரிதல் என்ன?

ஒரு அடிப்படை அறிவோடு நாம் முதலில் தெளிவாக இருக்கிறோமா?

திருமணம் என்ற பந்தத்திலிருந்தா? நமக்கு பூ வைக்க, பொட்டு வைக்க, நல்ல உடை உடுத்த அதிகாரம் அளிக்கப்படுகிறது? யோசித்துப் பாருங்கள். நம் சிறு வயது முதலே நாம் பொட்டுகளை விதவிதமாய் வைக்கின்றோம். நல்ல ஆடைகளை அணிந்து வருகிறோம். விரும்பிய வாசனை உள்ள பூக்களை சூடிக்கொள் கிறோம். இப்பிடி சிறு வயது முதல் நமக்கான விருப்பங்களாய் இருக்கும் ஒன்று கணவன் வந்த பிறகு எப்பிடி அவருக்காய் மாறுகிறது? அவர் இல்லையென்றாலும் எப்பிடி மாறுகிறது?

"இந்தா மல்லி பூ வச்சிக்க , உன் புருஷன் பாரு எப்பிடி மயங்கி வருவான்னு " மச்சி பூ வாங்கிட்டு போடா , உன் மனைவி கோவம் போய் ரிலாக்ஸ் ஆயிடுவாங்க" இப்படி பல வசனங்கள் கேட்காத காதுகள் இருக்காது. என்னைக் கேட்டா இதெல்லாம் புரிதலே இல்லாத வசனங்கள் என்று தான் தோணும்.

"நாம் பெரும்பாலும் வாசனையுள்ள பூக்களை தான் சூடிக் கொள்வோம் அதற்கு காரணம் யாரையும் மயக்குவதற்கு அல்ல" ஒவ்வொரு வாசனைப் பூவிற்கு என்று ஒரு மருத்துவப் பலன் உள்ளது. அதைச் சூடும் போது உடலுக்கும் மனதுக்கும் அமைதியைக் கொடுக்கிறது. அமைதியுள்ள இடத்தில் மகிழ்ச்சி தன்னாலயே பிறக்கிறது. அவ்வளவு தான் விஷயம்.

ஆனால் திருமணத்திற்கு பிறகு அவள் சுமங்கலி ஆகிவிட்டாள்."சுமங்கலியின் அடையாளங்கள் சிவப்பு கலர் பொட்டு, நெற்றியில் குங்குமம், தலையில் பூ" இது இல்லாமல் அவள் இருக்கக்கூடாது.

நிச்சயம் பெண்கள் இதை விரும்பினால் அணியலாம்' அணிவது அவரவர் விருப்பம்' அதைக் குறை சொல்வது என் நோக்கமல்ல' அது என்ன சிவப்புக் கலரில் பொட்டு ? சிவப்பு குங்குமம்? இதுவும் அறிவியல் சார்ந்த ஒன்று தான்.
நம் சார்ந்த விஷயங்களை பெண்களே நாம் தான் தேடித் தெரிந்துக் கொள்ள வேண்டும். போய் தேடுங்கள் என்ன காரணம் என்று? புரியும்.

அர்த்தமற்று எனக்கு புருஷன் இருக்கிறான் நான் வைத்துக் கொள்கிறேன்' உனக்கு தகுதியில்லை வைத்துக் கொள்ள என்று மார்த்தட்டக் கூடாது. நாமே ஒருவரின் உணர்வுகளோடு மனிதநேயமற்று விளையாடக்கூடாது.

பிறந்த முதல் நமக்கான ஒன்றை இறக்கும் வரை நமக்கு தொடர விருப்பம் எனில் தயங்காமல் செய்யுங்கள்.

கணவன் இறந்த பின்பு பல காலமாய் பெண்கள் பொட்டு, பூ வைப்பதை தவிர்த்து வந்தனர் ஆனால் தற்போது பல பெண்கள் சின்ன சைஸில் உள்ள கருப்பு கலர் பொட்டுகளைப் பயன்படுத்துகின்றனர்

அவர்கள் டிசைன் "கருப்பு வண்ணம் என்பது அமங்கலிகானதாம்". சோ கணவன் இழந்தப் பெண்கள் அமங்கலிகள் இங்கே. என்ன கொடுமை இது?

அப்பிடியும் மீறி சில பெண்கள் சிவப்பு கலரில் பயன்படுத்தினாலும் பொது நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ளும் அவரின் மீது விழுமே ஒரு முகச்சுழிப்பு பார்வை. என்னவென்று சொல்வது இந்த மனநிலைகளைக் கண்டு?



இதுவே உங்கள் பிள்ளைகளாக இருந்தால்! தப்பே இல்லை!!

கணவரோடு பிரிந்து வாழும் பெண்களின் நிலைமை இதை விட மோசம் என்றே கூறலாம் ”காலை அவர்கள் வெளி சொல்லும் நேரம் முதல் மாலை வீடு வரும் நேரம் வரை மணி கணக்கெடுக்கப்படும்

அவள் வைக்கும் பூவின் முழமும் அளவெடுக்கப்படும்
ஒருத் தொலைப்பேசி அழைப்பும் நெற்றிச் சுருக்கத்தோடு கவனிக்கப்படும் இதைச் செய்ய புரளிகள் பேச யாரும் வெளியூரில் இருந்து வரமாட்டார்கள்.
நம்மைச் சுற்றிய உறவுகளே தான் இதைச் செய்வார்கள். அது தோழியாக இருக்கலாம்் மாமி , அத்தை , பெரியம்மா, சித்தி ,தங்கை , பக்கத்து வீட்டுகாரங்க என யாராவது கூட இருக்கலாம்.

இரண்டு நாள் வெளியூர் பயணம் சென்றால் கூட விசாரணைகள் கமிட்டி கூடி அனைவருக்கும் செய்திகள் கடத்தப்படும். எந்தக்காலத்திலும் மாறாமல் கட்டுக்கோப்பு என்ற பெயரில் நாம் வாழ நினைத்து அடுத்தவர் வாழ்வில் ஏற்பட்ட புண்ணை சுரண்டி விடுவதில் நாமே தான் முதலாய் முனைப்புக் காட்டுக்கிறோம்.

”விட்டு ஓடிய ஒருவருக்காக ஒருப் பெண் நல்ல உடை அணியக்கூடாது் பூ வைக்கக் கூடாது பவுடர் பூசக் கூடாது என்று அவரை வாட்டினால் ” நம்மை விட மூளை மங்கியவர்கள் யாரும் இல்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது.

வாழ்வது சுதந்திரம் சுயத்தன்மையுடன் வாழ்வது பேரின்பம். வாழ்ந்து தான் பாருங்களேன்.

அதைவிடுத்து பேசி பேசியே ஒரு வட்டம் போட்டு அதற்குள் தானும் சுருங்கி, அடுத்தவரின் உணர்வுகளையும் சுருக்கி ஏன் ஒரு மந்த நிலையில் நாமே வாழ வேண்டும்?

ஒரு ஆணோ பெண்ணோ நிச்சயம் அவர்கள் ஒரு நாள் தந்தையாய் தாயாய் மாறும் காலத்தில் தன் மகளுக்கோ ,மாமனாராய் மாமியாராய் மாறும் காலத்தில் தன் மருமகளுக்கோ ”எந்த சூழ்நிலையிலும் அவளின் விருப்பங்களின் தேவைகளில் கட்டுபாட்டை இடுவதை விடுங்கள் சிறு வயது முதல் அவளுக்கான உரிமை அவளின் பூவும் பொட்டும் .
ஊருக்காக ஊருக்காக என்று அர்த்தமற்று இரக்கமற்று ஒருவர் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்துவதோ, அதை வீணாக பிடித்து பேசிக் கொண்டிருப்பதிலோ எந்த பயனும் இல்லை.

குங்குமம் அணிய ஆசைப்படும் அவளின் நெற்றிக்கு இதுதான் தான் பூச வேண்டும் என்று சட்டம் போடாதீர்கள்.
மாறுங்கள் இல்லையேல் மாற்றம் வேண்டுபவரை வாழ விடுங்கள்.

நன்றி: உலகத்தமிழ் மங்கையர் மலர்.







யேர்மனியில் 15.09.2019 அன்று நடைபெற்ற வெற்றிமணி வெள்ளிவிழாவில்
ஈஸ்வரா சலங்கை ஒலி நாட்டியாலய மாணவர்கள் வழங்கிய நடனம்



# கடவுள் பக்தன் உறவு

# தேவைக்கு மட்டுமா

**சேவியர்**

“ஏதாச்சும் தேவை இருந்தா மட்டும் தான் அவன் நம்மளத் தேடி வருவான்” என சிலரைப் பற்றிச் சொல்வதைக் கேட்டிருப்போம். அப்படிப்பட்ட நபர்களை யாரும் மதிக்க மாட்டார்கள். சுயநலவாதிகளாய் இவர்கள் சித்தரிக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட ஆட்களைப் பார்த்தாலே காத தூரம் ஓடிவிடுவோம். காரணம் அவர்களுடைய மனதில் உண்மையான அன்பு இருப்பதில்லை. தேவைக்காக நாடிச் செல்கின்ற ஒரு சந்தர்ப்ப உறவு மட்டுமே இருக்கும்.

“அட.. நான் அப்படியில்லப்பா.. தேவைக்காக மட்டும் ஒருத்தனை நாடிப் போறதே இல்லை” என சொல்லப் போகிறீர்களா ? ஒரு நிமிடம் பொறுங்கள். மனிதர்களிடம் அப்படி. உங்களுக்கும் கடவுளுக்கும் இடையேயான உறவு எப்படி இருக்கிறது ?

அவசர கதியில் வீடு, வேலை வாழ்க்கை என ஓடிக்கொண்டே இருக்கும் போது நாம் மறந்து போகின்ற முதல் நபர் கடவுள் தான். சட்டென ஒரு நோய் வந்து படுக்கையில் விழும்போது தான் “ ஆண்டவா” என மனம் அழைக்கும். அதுவரை அந்த ஆண்டவர் ஒரு வேண்டா விருந்தாளியாய் தான் இருப்பார்.

உக்காந்து கடவுளை நினைக்கவே நேரமில்லைன்னு சொல்லிட்டு இருப்பார்கள். அலுவலக வேலையாக ஊர் ஊராக அலைந்து திரிவார்கள். கடவுள் விஷயங்களையோ பிரார்த்தனைகளையோ கண்டுக்கவே மாட்டார்கள். கேட்டால், அதுக்கெல்லாம் எங்கே டைமிருக்கு என சொல்வார்கள். ஒரு நாள் திடீரென மகனோ மகளோ ஒரு பெரிய நோயில் சிக்கிக் கொண்டால், அனைத்தையும் விட்டு விட்டு குழந்தையே கதியென கிடப்பார்கள். கோயில் கோயிலாக வழிபட தொடங்குவார்கள்.

நேற்று வரை இல்லாத நேரம் இன்றைக்கு எப்படிக் கிடைத்தது ? நேற்று வரை இல்லாத கடவுள் சிந்தனை இன்று எப்படி வந்தது. ஒரு நாள் 24 நான்கு மணி நேரம் என்பது மாறி 48 மணி நேரமாச்சா என்ன ? இல்லை. பின் எப்படி ? அங்கே தான் வாழ்வின் முதன்மைகள் வந்து முகம் காட்டுகின்றன.

உண்மையில் நமக்கு நேரமில்லை தான். ஆனால் எவையெல்லாம் முக்கியம் என கருதுகிறோமோ அவற்றுக்கு ஒதுக்க நமக்கு நேரம் நிச்சயம் இருக்கிறது. குழந்தையின் உடல்நிலை முக்கியம் எனத் தோன்றும் போது மற்ற அனைத்தையும் ஒதுக்கி வைக்கிறோம். அதே போல, கடவுள் முக்கியம் என தோன்றினால் நமக்கு

கடவுளோடு உறவாடவும், உரையாடவும் நேரம் கிடைக்கும்.


கடவுள் நம்முடைய தாய் தந்தையைப் போல இருக்கிறார். நம் மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறார். ஒரு தாய் தந்தை எப்போது மகிழ்ச்சியடைவார் ? நமது பணம் அவர் கைக்குப் போகும் போதா ? நமது தேவைக்கு அவரை பார்த்துப் பேசும் போதா ? நம்முடைய இயலாமையின் நேரத்தில் அவரைத் திட்டும் போதா ? இல்லை. எந்த தேவைகளும் இல்லாமல் அவரை சந்திக்கும் போது தான்.

“என்னப்பா.. இந்த நேரத்துல கால் பண்ணியிருக்கே.. என்னாச்சு ? “ என அப்பா அம்மா பதட்டமாய்க் கேட்கும் போது, “இல்லப்பா.. இல்லை அம்மா உங்க ஞாபகம் வந்துச்சு.. பேசணும் போல தோன்றிச்சு. அதான் பேசினேன்” என சொல்லிப் பாருங்கள். அது தான் ஒரு தந்தையின் மனதை தாயின் மனதை நிச்சயம் நெகிழச் செய்யும். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பெற்றோருடன் தொடர்பில் இருப்பது தான் அவர்களுக்கு மகிழ்ச்சியான விஷயம்.

“என் மகன் தினமும் ஒருதடவையாச்சும் என்னோடு பேசுவான்” என பெருமிதத்தோடு பேசும் பாட்டிகளைப் பார்த்திருக்கிறேன். இந்த வயதிலும் தன்னிடம் தினமும் மகன் பேசுகிறானே என்பது தான் அவர்களுக்கு அதிகபட்ச ஆனந்தமாய் இருக்கிறது.

கடவுளும் அப்படிப்பட்ட ஒரு நட்புறவைத் தான் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நமது தேவைக்காய் நச்சரிக்கும் போதல்ல, தேவைப்படாத போதும் அவர் பெயரை உச்சரிக்கும் போது தான் அவர் மகிழ்கிறார். “சும்மா உன்னைப் பாக்க வந்தேன்” எனும் நேசத்தை அவர் ரசிக்கிறார்.



சில வீடுகளில் மிகவும் முதிய வயதினர் இருப்பார்கள். அவர்களால் எதுவும் செய்ய முடியாது. ஆனாலும் பிள்ளைகள் அவரிடம் வந்து அனுமதி கேட்பார்கள். “அப்பா நான் இதைச் செய்யவா ? அதைச் செய்யவா ? ” என்று. தந்தைக்கு எதுவும் புரியாவிட்டால் கூட, “அப்படியே செய்ப்பா..” என்பார்கள். தன்னிடம் வந்து மகன் அனுமதி கேட்கிறானே எனும் நிறைவு அவர்களிடம் இருக்கும். சுயமாய் முடிவெடுக்கும் நிலைக்கு வந்தபின்பும் கூட தந்தையைச் சார்ந்து இருப்பதில் இருக்கின்ற புனிதமான உறவு தான், இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பதும். எதைச் செய்யும் முன்னும், “இப்படிச் செய்யவா ? “என கடவுளிடம் கேட்பது எவ்வளவு இனிமையானது ?

கடவுளோடு நமக்குள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அதற்கு தொடர்ந்த உரையாடல்கள் கடவுளோடு செய்ய வேண்டியது அவசியம். இறைவனோடான உறவின் வெளிப்பாடு, சக மனிதனோடான மனிதாபிமான செயல்களில் வெளிப்பட வேண்டும்.

இறைவனுக்கும் நமக்குமிடையேயான தொடர்பு வலுவாக இருக்கும் போது, நாம் சோதனைகளை கடக்கின்ற வலிமை கிடைக்கின்றது. சிங்கத்தின் மேல் இருக்கின்ற சிற்றெறும்பு வழியில் எதிர்படுகின்ற சுண்டெலிகளைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. சுண்டெலி வரும்போதல்ல, எப்போதுமே சிங்கத்தின் முதுகில் இருப்பதே உண்மையான அன்பு.

கடவுளோடு எப்போதும் தொடர்பில் இருந்தால் தான் கடவுள் விரும்புவது என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். தந்தையோடு இணைந்தே இருக்கின்ற மகனிடம் தான் தந்தையின் இயல்புகள் இழையோடும். அவனிடம் தான் தந்தையின் சிந்தனைகள் பதியமிடப்படும். இறைவனின் இயல்புகளும், இறைவனின் விருப்பங்களும் நமது வாழ்விலும் வெளிப்பட நாம் கடவுளோடு தொடர்பில் இருக்க வேண்டும்.


அதற்கு முதலில் கடவுளுக்கும் நமக்கும் இடையே மதில் சுவர் போல இருக்கின்ற விஷயங்களை விலக்க வேண்டும். அப்போது தான் கடவுளோடான தொடர்பு நமக்கு எப்போதும் இருக்கும். அந்த தடைகள் உலக கேளிக்கைகளாகவோ, தொழில்நுட்பங்களாகவோ, தீய சக்திகளாகவோ, தீய சிந்தனைகளாகவோ, சுயநலமாகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

கடவுளுக்கும் நமக்குமிடையே உள்ள உறவை வலுவாக்குகின்ற நண்பர்களை நம்முடன் வைத்திருக்க வேண்டும். அவர்கள் நமது ஆன்மீக பாலத்தை வலிமையாகக் கட்டியெழுப்புவார்கள். நமது நண்பர்கள் நம்மை நன்மையின் வழியில் நடத்துபவர்களாக இருக்க வேண்டும்.

எதிர்பாராத நேரத்தில் மனைவிக்கு அளிக்கின்ற பரிசு குடும்ப உறவைக் கட்டியெழுப்பும். எதிர்பாராத நேரத்தில் தந்தையோடு செலவிடுகின்ற சில மணித் துளிகள் புனித உறவைக் கட்டியெழுப்பும். தேவைகளற்ற போதும் தாயின் கரம் பிடித்து அமர்ந்திருக்கும் பொழுதுகள் இறை பிரசன்னத்தை உருவாக்கம் செய்யும்.

அதே போல தான், நம்மைப் படைத்துக் காக்கின்ற இறைவனின் அருகாமையில் அன்புடன் அமரும் தருணங்கள் ஆன்மிக உறவைக் கட்டியெழுப்பும். இறைவனின் அருகில் அமர்வது என்பது, இறைவனுக்குப் பிரியமானவற்றைச் செய்வதே. இறைவனுக்குப் பிரியமானது என்பது மனிதநேயத்தின் உயர்நிலையே. எப்போதும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பவர்கள், கண நேரமும் பிரியாமல் இறைவனோடு இருக்கிறார்கள்.





நமது தேவைகளை இறைவன் நிறைவேற்றுகிறார். நாம் இறைவனின் பிள்ளைகளாய் இருந்தால் மட்டும் போதுமானது.




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்
ஆடை அணிகலன்கள் மற்றும்
உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து
தேவைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Wolbecker Str.27
48155 Münster
Tel: 0251 13 65 194

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

# திருஞானசம்பந்தர் பாடல்களின் பதிக அமைப்பு



திருமதி.வலன்ரீனா.இளங்கோவன் B.A(Hons), M.A

இருபத்தேழு அருளாளர்களினால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு நூல்களாக விளங்குவன பன்னிரு திருமுறைகளாகும். தெய்வீகப் பாடல்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட தொகுப்பே திருமுறைகளாகும். இதில் முதல் ஏழு திருமுறைகளும் அடங்கன் முறை என்னும் தொகுப்பில் உள்ள தேவாரங்களாகும். சிவமணம் பரப்பும் தெய்வீகப் பாடல்களே தேவாரங்களாகும். முதல் மூன்று திருமுறையாக வைத்துப் போற்றப்படுவன சம்பந்ர் தேவாரங் களாகும்.

திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களாக ஏடுகளில் காணப்பட்டு இப்போது பதிப்புக்களில் காணப்பெறுவன 383 திருப்பதிகங்களாகும். திருவிடைவாயிற் கல்வெட்டுக் காட்டும் ஒரு பதிகத்துடன் 384 ஆகும். அக் கல்வெட்டுத் திருப்பதிகம் “மறியார் கரத்து எந்தை” எனத் தொடங்குவதாகும். ஆக இவ்வனைத்துத் திருப்பதிகங்களிலும் உள்ள திருப்பாடல்கள் 4,158 ஆகும்.[44]

இத் திருப்பதிகங்கள் பெரும்பான்மையும் பதினொரு பாடல்கள் கொண்டவை. சீர்காழிக்குரிய பதிகங்களில் பன்னிரண்டு பாடல்கள் கொண்டு விளங்குகின்றன. பன்னிரண்டு திருப்பெயர்களுடைய தலமாதலின் அவற்றைக் கூறிப் பரப்புதற்கு ஏற்றபடி இவை பன்னிரண்டு பாடல்களைக் கொண்டு “சைவசமய நுண் பொருட் பதிக” மாக விளங்குகின்றது. திருவெழுக்கூற்றிருக்கை ஒரே ஆசிரியப் பாவான் இயன்றுள்ளது. 54 பதிகங்கள் குறைப் பதிகங்களாக உள்ளன. அடிக்குறைவுடையனவாகவும் பாடற்குறை வுள்ளனம் என இரு வகையாக இக் குறைப்பதிகங் களைப் பாகுபாடு செய்யலாம்.[45]

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய முப்பெரும் சான்றோர் அருளிய திருப்பதிகங்களை இரண்டு முறையில் தொகுத்து உள்ளனர். நம்முன்னோர். ஒன்று பண்முறை என்றும், மற்றொன்று தலமுறை என்றும் கூறப்பெறும். பண்முறையென்பது இவர்கள் பாடிய பண்களை வகைப்படுத்தி ஒவ்வொரு பண்ணிற்கும் உரிய பதிகங்களைக் திருமுறைகண்ட புராணத்திற் கூறப்பெற்ற கட்டளை விகற்பத்திற்கேற்ப தொகுப்பு முறையாகும். முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பெற்ற சம்பந்தர் பாடல்களில், முதல் திருமுறையில், நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகாரக்குறிஞ்சி என்றும் ஏழு பண்களுக்குரிய 135 திருப்பதிகங்களும், யாழ்மூரிப்பதிகம் ஒன்று ஆக 136 திருப்பதிகங்கள் உ்ள்ளன.

இரண்டாம் திருமுறையில் இந்தனம் சீகாமரம், காந்தாரம், நட்டராகம், பியந்தைக்காந்தாரம், செவ்வழி என்றும் ஆறு பண்களுக்குரிய 122 திருப்பதிகங்கள் உள்ளன. மூன்றாம் திருமுறையில் காந்தார பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, புறநீர்மை, பழம்பஞ்சுரம், அந்தாளிக்குறிஞ்சி என்ற ஒன்பது பண்களுக்குரிய 125 பதிகங்கள் உள்ளன. 34 தலங்கள் ஆளுடையபிள்ளையார் பதிகங்களிற் குறிக்கப் பெற்ற வைப்புத் தலங்களாகும்.[46] இவ்வகையில் இவரது பாடல்கள் அடங்கல் முறையில் அமையப்பெற்று முதல் மூன்று திருமுறைகளாகக் காணப்ப டுகின்றன.

## சிவத்தமிழ் விருது 2020



1.பேராசிரியர்.சோ.சந்திரசேகரம்.
2.கவிஞர்.சோ.பத்மநாதன்.
3.மூத்த எழுத்தாளர்.திருமதி.கோகிலா மகேந்திரன்.
4.நாதஸ்வர வித்துவான்.வி.கே.பஞ்சமூர்த்தி.
5. ஓவியர்.கலாநிதி.மு.க.சு.சிவகுமாரன்.ஜேர்மனி (வெற்றிமணி , சிவத்தமிழ் பிரதம ஆசிரியர்)

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பிறந்த நாள் அறக்கொடை விழாவில் (07.01.2020) அன்று தாயகத்தில் 2020 ஆண்டுக்கான சிவத்தமிழ் விருது பெறும் சான்றோர் விபரம்




# சிவராத்திரி விரதத்தின் சிறப்பு
## வாரியார் விளக்கம்





சிவம் வேறு அறிவு வேறு அன்று. அறிவே மெய்ப்பொருள். மற்ற எல்லாம் பொய்ப் பொருள்கள்தான்.

பொய் என்பதற்கு நிலையில்லாதது என்பது பொருள்.
நிலையாக இருப்பவர் கடவுள் மட்டுமே.
மற்றவர்கள் எல்லாம் தோன்றி நின்று மொத்தமாக மாய்ந்து விடுபவர்கள்.

சிவ விரதங்கள் எட்டு அவற்றுள் சிவராத்திரி ஒன்று இது மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தி திதியன்று வருவது.
அதிகாலையில் நீராடி திருநீறும் ருத்திராட்ச மாலையும் அணிந்து சிவபூஜை செய்து.

திரு ஐந்தெழுத்து ஓதவேண்டும்.
பகல் முழுவதும் உபவாசம் இருக்க வேண்டும்.
மாலையில் மீண்டும் நீராடி.

சிவாலயம் சென்று வழிபட வேண்டும். முடியுமானால் நெய்விளக்கு ஏற்றி. மலரால் அர்ச்சனை செய்து உள்ளம் உருகி தேவாரம் மற்றும் திருவாசக பாடல்களை பாடி துதி செய்து வலம் வந்து அஷ்டாங்க வணக்கம் புரிந்து வழிபாடு செய்யவேண்டும்.

சிவராத்திரி அன்று இரவில் நான்கு காலங்களிலும் சிவபூஜை செய்ய வேண்டும். சிவபூஜை செய்ய இயலாதவர்கள்.
நான்கு காலங்களிலும் கோயிலில் நடைபெறும் பூஜைகளில் கலந்துகொண்டு தரிசிக்க வேண்டும்.

நிரம்பிய அன்புடன் திரு ஐந்தெழுத்து ஓதுதல் இன்றியமையாதது.
மறுநாள் காலை நீராடி சிவனை வழிபட்டு விரதத்தை முடிக்க வேண்டும்.

இப்படி விரதம் இருந்தவர்களின் சலக வினைகளும் நெருப்பில் விழுந்த பஞ்சு போல எரிந்து கரிந்து சாம்பலாகும்.

தீபங்களை வரிசையாக வைத்து சிவபெருமானை வழிபட வேண்டும். சிவபெருமான் தீபமங்கள ஜோதியாக விளங்குபவர் அவர் ஒளிவெள்ளமாக திருவண்ணாமலையில் காட்சி தருகிறார்.

கோயிலுக்குள் நீராடிய பிறகே செல்ல வேண்டும் கொடிமரத்திற்கு வெளியே விழுந்து வணங்கி விநாயகரை ஒரு முறையும் சிவபெருமானை மூன்றுமுறையும் அம்பிகையை நான்கு முறையும் வலம்வர வேண்டும்.

வழிபடும்போது மனம் இறைவன்மீது மட்டுமே இருக்க வேண்டும் விபூதி மற்றும் பிரசாதத்தை பயபக்தியுடன் இரண்டு கைகளாலும் ஏந்திப்பெறவேண்டும்.
அதைக்கீழே சிந்துவதோ எறிவதோ பெரும்பாவமாகும் சண்டிகேஸ்வரர் மீது நூல் இடக்கூடாது சிவலிங்கத்திற்கும் நந்திதேவருக்கும் இடையே போகக்கூடாது.

கோயிலில் பிரசாதங்களை சாப்பிட்டுவிட்டு தூண்களில் துடைப்பது தவறாகும் வழிபாடு முடிந்தபிறகு கொடிமரத்தின் அருகில் வடதிசை நோக்கி அமர்ந்து மூலமந்திரம் ஜெபிக்க வேண்டும்.

அதிக சப்தம் இல்லாமல் இனிமையாக தோத்திரப் பாடல்களை பாடவேண்டும்.
கோயிலுக்கு செல்வோர் முக்கியமாக விளக்குகளில் எண்ணெய் ஊற்ற வேண்டும்.

இன்சொல் பேசுகின்றவர்களுக்கு உலகில் ஒருவகையான துன்பமும் இல்லை. எம வாதனையும் கிடையாது. சிவகதி கண்டிப்பாக கிடைக்கும்.

வீட்டுத் தலைவர் ஒரு பாடலைப் பாட. மற்றவர்கள் அதை தொடர்ந்து பாடி இறைவனை வழிபாடு செய்ய வேண்டும்.

குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன். அந்த வீட்டில் தெய்வ கடாட்சமும். லட்சுமியின் அனுக்ரஹமும் உண்டாகும்.

எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்ய வேண்டும். எல்லா உயிர்களிலும் கடவுள் இருக்கிறார். எனவே உயிர்களுக்குச் செய்யும் நன்மையே உண்மையான கடவுள் வழிபாடாகும்.



தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம்,
றோர்மொண்ட் - நெதர்லாந்து

தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம்
Stichting Tamil Cultureel Activiteits-en Hulpcentrum
றோர்மொண்ட்-நெதர்லாந்து
ROERMOND-NEDERLAND

சிவத்தமிழ் தரணியில்
அகமும் புறமும் ஆலயம் அமைத்து
உலகம் செழிக்கும் வண்ணம்
என்றும் மலர வாழ்த்துகின்றோம்.

0316 84430671




சிவத்தமிழ் சிறக்க வாழ்த்துகிறோம்


என்றும் சிறப்பு விலையில்
தரமான சேவைகள்
Luckyfly
Lucky Fly Reisebüro
Gulf Air
2020 Summer
Frankfurt - Colombo
Ab; 599€
46Kg
e.mail:siva 0108 @hotmail.com
Mob:No: 0179 1484 892
www.Lucky-fly.de
Emirates
Gulf Air
QATAR
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Rheinische str.56
44137 Dortmund
Tel:+49 231 96762806


PALAZIO
EVENTS
உங்கள் இல்லத்தின்
சகல விதமான
மங்கல வைபவங்களுக்கும்,
மேடை நிகழ்வுகளுக்கும் ஏற்ற
உங்கள் விருப்பத்திற்கேற்ப
அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் ஓர் அழகிய மண்டபம்!
0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை
அமரக்கூடிய வாகனத்
தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.
மேலும் எம்மிடம்....
★ போட்டோ மற்றும் வீடியோ
த.கோபிநாத்
+ (49) 1525 3961138
Kasinostr. 25 |42103 Wuppertal